544

தொகுதி 11.] 1932ஸ்ரீ செப்டம்பர்மீ [பகுதி 8.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
கா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மாதவி மாதவன் 2-பாகம்

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது ; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது ; தேன்போல் தித்திப்பது ; பொருள் நிரம்பியது ; இதுவரையில் வெளிவராதது ; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது ; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

## இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10-0

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா. 2-0-0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்

No. 3 NOV 1932

ஷண்பகவல்லி இவ்வாறு நினைத்ததால் சந்தோஷமும் நம்பிக்கையும் ஏற்படவே அவள் தைரியமாக நடந்து சென்று சொற்ப நேரத்துக்குள் மோகனதாஸ் வசிக்கும், நகரத்தின் எல்லைக்குச் சொற்ப தூரத்திலுள்ள தனிமையான குடிலை யடைந்தாள். முன்னாள் அவளுடன் பேசும்போது மோகனதாஸ் தான் வசிக்கும் இடம் இருக்குமிடத்தைக் குறிப்பாகச் சொல்லி யிருந்தபடியாலும், அவளும் அப்பிரதேசங்களை யெல்லாம் நன்கு அறிவாளாதலாலும் யாதொரு கஷ்டமும் இன்றி அவ்வீட்டை யடைந்தாள்.

அவ்வீடு மிகச் சிறியதாகவும் தனிமையான இடத்திலும் இருந்ததென்றாலும் அழகாகவும் சுத்தமாகவும் ரம்மியமானதாயும் இருந்தது. அவ்வீட்டுக்குச் சமீபத்தில் வரும்போதே அவளது ஹிருதயம் படபடவெனத் துடித்தது. அவ்வீட்டைச் சுற்றிலும் சிறு தோட்ட மிருந்தது. அதைச் சுற்றிலும் கம்பியால் வேலி போடப்பட்டு அவ்வேலிக்கு வாயிலும் இருந்தது. அவ்வாயிலி னருகில் வந்தபோது மேற்கொண்டு போவதா இல்லையா என்னும் சந்தேகம் பிறந்தது. ஆயினும் இவ்வளவு தூரம் வந்த பிறகும், பயங்கரமான இடங்களை யெல்லாம் தனியாகக் கடந்தபின்னரும், அதிலும் தான் கோரிய இடத்துக்கே வந்துவிட்ட பின்னரும் திரும்பிச் செல்வதா என்னும் எண்ணம் உண்டாயிற்று. ஆகவே அவள் தைரியமாக அவ்வாயிலின் கதவைத் திறந்துகொண்டு வீட்டுக்குச் செல்லும் மேடையின் வழியே அவ்வீட்டு முன் வாயிற்படியை யடைந்தாள். அக்கதவு திறக்கப்பட்டிருந்தது. உள்ளே ஒரு சிறு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. உள்ளே யாரோ இருவர் பேசும் சத்தம் ஷண்பகவல்லியின் காதில் விழுந்தது. ஒருவருடையது மோகனதாஸின் குரல் என்று தெரிந்துகொண்டாள். மற்றொரு குரல் யாரோ பெண்


186572
சென்னை-600 008

பேசுவது போலிருந்தது. அப்பெண் அன்புடனும் ஆதர வுடனும் பேசுவது ஷண்பகவல்லியின் காதில் விழுந்தது.

ஆகவே அவளுக்கு மறுபடியும் துக்கம் உண்டாய்விட் டது. பொறாமை என்னும் பேய் அவளைப் பிடித்து ஆட் டத் தொடங்கியது. இவ்வாறு பொறாமைப் படுவது ஆண் பெண்களாகிய இருவருக்கும் சகஜமாய் இருக்கிறது. ஒரு ஆடவன் தான் நேசிக்கும் பெண் மற்ற எந்த ஆடவனுடன் பேசினாலும் இருந்தாலும் உடனே அவனுக்குப் பொறாமை உண்டாய் விடுகிறது. அதுபோலவே ஒரு பெண் தான் நேசிக்கும் ஆடவன் ஒருவன் எந்தப் பெண்ணுடன் பேசினா லும் அவளுக்கு உடனே பொறாமை ஏற்பட்டு அது துக்க மாக மாறிக் கண்ணீரும் வடிய ஆரம்பிக்கிறது. விஷயத்தை ஆராய்வதற்கும் நிதானமிருப்பதில்லை. விஷயத்தை விசா ரித்து அறிந்து கொள்ளாமலே தாங்களாகவே தவறாகவோ அல்லது சரியாகவோ ஒரு முடிவுக்கு வந்து அதனால் பொறா மைப்படவும் துக்கப்படவும் ஆரம்பித்து விடுகின்றனர். அவ் வாறே ஷண்பகவல்லியும், மோகனதாஸுடன் யாரோ ஒரு பெண் பேசுகிறாள் எனத் தெரிந்ததும், அவள் யார், என்ன என்பதையும் விசாரிக்காமலே பொறாமையும் துக்கமும் அடையலானாள். திக்பிரமையுடன் இன்னது செய்வதென்று தோன்றாமல் அப்படியே நின்றாள். தான் அவ்விடம் வந் திருப்பதாகக் காண்பித்துக் கொள்ளவும் விரும்பவில்லை. அவ ளுக்கு முன்னுக்குச் செல்லவோ அல்லது பின்னுக்குச் செல் லவோகூட மனம் வரவில்லை. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை உற்றுக்கேட்டாள். அவ்வாறு கேட்பது முறை மையா அல்லவா என்பதையும் அவள் ஆலோசிக்கவில்லை. பிறர் பேசுவதை மறைந்து நின்று கேட்பது தவறாகும் என்ப தையும் அவள் கவனிக்கவில்லை. எதையும் ஆலோசிக்கக்

கூடிய மனோநிலைமை அவளுக்கிருக்கவில்லை. உள்ளே ஒரு பெண்மணி அன்புடன் பேசுவதுபோல் அவளுக்குக் கேட்டதே தவிர அவள் பேசியது இன்னதென்றும் தெரியவில்லை. அதைத் தெரிந்துகொள்வதிலேயே அவளுடைய வாழ்க்கையின் இன்பமோ துன்பமோ பொருந்தி யிருப்பதுபோல் பாவித்து அவள் அதை அறிய முயன்றாள்.

அச்சமயத்தில் மோகனதாஸுடன் உள்ளே இருந்த அப்பெண், அன்பான குரலில், 'ஆனால், எனதன்புள்ள மோகனதாஸ்! என்ன நடந்தது என்பதை நீ என்னிடம் சொல்லித்தானாகவேண்டும். நான் எவ்வளவு அன்புடன் நேசிக்கிறேன் என்பதை நீ அறிவாயல்லவா?' என்று கேட்ட சொற்கள் வெளியில் நின்றிருந்த ஷண்பகவல்லியின் காதில் விழுந்தது. உடனே மோகனதாஸ், 'நான் ஏதோ கவலையுடனும் விசாரத்துடனும் இருப்பதாக நீயாக ஏன் நினைத்துக் கொள்கிறாய். அப்படி யொன்றுமில்லை' என்றான். அப்போது அப்பெண், 'எனது பிரியமுள்ள மோகனதாஸ்! எப்படி நினைக்கிறேனென்றால்—' என்று கூறியதுமட்டும் ஷண்பகவல்லிக்குக் கேட்டது. பிறகு அப்பெண் மெதுவாகப் பேசியபடியால் ஒன்றும் கேட்கவில்லை. சொற்ப நேரத்துக்கெல்லாம் மோகனதாஸ் ஆறுதல் கூறும்முறையில், 'எனதன்புள்ள பெண்ணே! எனக்காக நீ ஏன் கண்ணீர் வடிக்கின்றாய். நீ இவ்வாறு துக்கப்படுவதைக் காண நான் சகியேன். நாம் இங்கு பேசிக்கொண் டிருக்கும்போதே இருட்டு அதிகமாய் விட்டது. விளக்கு கொண்டு வரும்படி கட்டளை யிடுவோமா அல்லது தோட்டத்தில் சொற்பநேரம் உலாவிக்கொண் டிருப்போமா?' என்று கேட்டான். அதற்கு அப்பெண், 'உன் இஷ்டப்படி செய்வோம். உன் நெற்றியில் விழுந்திருக்கும் கூந்தலை அப்புறம் தள்ளுகிறேன். இன்று

நீ ஏதோ மனக் கவலையை அடைந்திருக்கிறாய் என்பது நன்றாகத் தெரிகிறது. உன் கரம் சூடாகவும் ஜுரம் வந்தது போலும் இருக்கிறது. உன் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துப் பார்க்கிறேன். ஆ! அங்கும் சூடாக இருக்கிறதே. அன்பா! சற்றுநேரம் தோட்டத்தில் உலவி விட்டு வருவோம்,' என்று மிக்க அன்புடனும் ஆதரவுடனும் பேசினாள்.

வெளியில் நின்று கொண்டிருந்த ஷண்பகவல்லி உடலில் உயிர் அற்றவளாய் அச்சம்பாஷணையை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பலவிதமான சிந்தனைகள் தோன்றலாயின. தன் காதலனான மோகனதாஸனுடன் அவ்வளவு அன்புடன் பேசும் அந்தப் பெண் யார்? அவள் இளம் பிராயத்தினளாயும், அழகு மிக்கவளாயும் இருக்க வேண்டுமென்று தோன்றியதால் ஷண்பகவல்லிக்குப் பொறாமை அதிகரித்துவிட்டது. ஆனால் உடனே அவள் மனதில் ஒரு எண்ணம் உதயமாயிற்று. அப்பெண் மோகனதாஸின் சகோதரியாக இருக்கக்கூடாதோ என்று நினைத்தாள். எனினும் தன்னுடன் பேசிய காலத்தில் அவன் தனக்கொரு சகோதரி இருப்பதாகச் சொல்லிக்கொண்டதில்லை, அப்படி ஏதேனும் ஒரு சகோதரி இருப்பதாயிருந்தால் ஷண்பகவல்லியுடன் அதற்கு முன்னாள் அவன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தபோது பிரஸ்தாபித்திருப்பானல்லவா? ஆகவே அவள் அவனுடைய சகோதரியல்ல. பிறகு யாரா யிருக்கக்கூடும்? ஷண்பகவல்லி என்ன செய்வதென்று தோன்றாமல் நின்ற இடத்திலேயே நின்றாள். ஆனால் மோகனதாஸனும், அப்பெண்ணும் தோட்டத்தில் உலாவப் புறப்பட்டு விட்டார்கள். ஷண்பகவல்லி அவர்களுடைய எதிரில் அங்கேயே எப்படி நின்றுகொண்டிருப்பது? விரை

வில் சென்று எங்கேனும் மறையவேண்டுமென்று நினைத்தாலும் அவளது பாதங்களைத் தரையுடன் சேர்த்து ஆணி அடித்திருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. பாதங்களை அசைக்கவும் அவளால் முடியவில்லை. இதற்குள் கதவு நன்றாகத் திறக்கப்பட்டு அவர்களிருவரும் வெளியே வந்தார்கள். மோகனதாஸ் தனது இடது காத்தை அம்மாதின் இடுப்பில் போட்டு அவளை அணைத்துக்கொண்டிருந்தான். அவளும் தனது வலது காத்தை அவனது கழுத்தில்போட்டு அணைத்துக்கொண்டிருந்தாள். அவர்களிருவரையும் ஷண்பகவல்லி கண்டதும் தான் இதுவரை யார் என்று அறியமுடியாமல் கஷ்டப்பட்ட அப் பெண்மணி நடினத்தில் பிரசித்தி பெற்ற ராஜலட்சுமி என்பதை அறிந்தாள்.

உடனே ஷண்பகவல்லியின் வாயினின்றும் ஒருவிதமான பெரிய சத்தம் வெளிப்பட்டது. அப்போது அவளுக்கு ஏதோ ஒருவிதமான சக்தி உண்டாகவும் அவள் அங்கிருந்து பறந்தோடினாள். இதைக்கண்ட மோகனதாஸ், 'இதென்ன ஆச்சர்யம்! யார் அது, அப்படிக் கத்திவிட்டு ஓடியது' என்று கூறிக்கொண்டே ராஜலட்சுமியை விட்டுவிட்டு, ஓடிய ஆளின் பின்னால் துரத்திக்கொண்டு சென்றான். அப்படி ஓடியவள் ஷண்பகவல்லி என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆயினும் அவள் அதிக பீதியடைந்து விட்டிருந்தபடியால் அங்கு யாரிடமும் அகப்படக் கூடாதென்னும் எண்ணத்துடன் ஓடியதால் அவள் வேகமாகச் சென்று வெகு தூரத்துக் கப்பாலுள்ள ஒரு நந்தவனத்தை யடைந்து திரும்பிப் பார்த்ததில் தன்னை யாரும் துரத்திக்கொண்டு வரவில்லையென்று தெரிந்ததால் அங்கிருந்த ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்துகொண்டு தன் துக்கத்தைப் பொறுக்க முடியாமல் ஓவென்று அழுதாள்.

'சுவரோடாயினும் சொல்லியழு' ;என்பதுபோல் ஏதேனும் துக்கம் யாருக்காவது ஏற்பட்டால் அதை ஆற்றிக் கொள்வதற்காக ஒருமுறை அழுதுவிட்டால் அது தீர்ந்துவிடும். அதுபோல் ஷண்பகவல்லி நந்தவனத்தின் பெஞ்சியின்மீது உட்கார்ந்து சிறிதுநேரம் அழுததும் அவளுக்கு ஒரு விதமான ஆறுதல் ஏற்படவே அவள் பிறகு பின் வருமாறு சிந்திக்கலானாள்:—'நான் இவ்வாறு ஏமாற்றத்துடன் நடந்து கொண்டிருக்கலாகாது. ஆடவர்களில் மிக்க போக்கிரியாயும் சிறிதும் தகுதியற்றவனுயுமுள்ள ஒருவனிடம் நான் அன்பு செலுத்தியது மிகப்பெரிய தவருகும். ஓ கடவுளே; இவ்வளவு அயோக்கியத்தனம் இளமையும் அழகும் வாய்ந்த ஒருவனிடம் நிரம்பி யிருப்பதும் தகுமோ? இன்று நான் சொந்த அனுபவத்தால் கற்றுக்கொண்ட பாடம் மிகக்கொடியது. சில மணி நேரங்களுக்குள் நான் பெற்ற அனுபவம், என் வாழ்க்கைக்குப் பெரிய பிரகாசத்தை அளித்துவிட்டது. இன்று காலே நான் படுக்கையிலிருந்து எழுந்தது முதல் இதற்குள் எத்தனேயோ வருஷங்களில் பெற வேண்டிய அனுபவத்தைப் பெற்றுவிட்டேன். ஆகவே இனிமேலாவது மனே உறுதியுடன் நடந்துகொள்ள வேண்டும். அவனிடம் எனக்குத் தோன்றியுள்ள விசுவாசத்தை ஒழிக்க முயற்சி செய்வேன். அவனுடைய உருவத்தையே என் மனக் கண்களினின்றும் அப்புறப்படுத்திவிடுவேன்.'

பிறகு ஷண்பகவல்லி அங்கிருந்து புறப்பட்டுத் தைரியமாகவும் விரைவாகவும் நடந்து தனது வீட்டை நோக்கிச் சென்றாள். எனினும் அவளுக்கு வழி முழுதும் துக்கம் அதிகரித்துக் கொண்டும், கண்களினின்றும் நீர் வடிந்துகொண்டுமிருந்தது. காதல் சம்பந்தமான அவள் கனவு பாழாய்ப் போயிற்று. உலகத்தில் இன்பம் என்பதே கிடையாது என்

னும் முடிவுக்கு வந்தாள். இனி இவ்வுலகில் வாழ்ந்திருப்பதே வீண் வேலை என நினைத்தாள். ஐயோ பாவம்! அப்பெண்மணி இருப்பதினும் இறப்பதே மேல் என்றும் கருதினாள். இவ்வாறு பலவிதமாக நினைத்துக் கொண்டே நடந்து சென்று அவள் இரவு பதினொரு மணிக்குத் தன் மாளிகைக்குப்போய்ச் சேர்ந்தாள். யாருக்கும் தெரியாமல் பின்புற வாயிலின் வழியே மாளிகையில் புகுந்து தன் அறைக்குச் சென்று பெரிய போர்வையையும் போர்த்துக் கொண்டு படுத்துக் கொண்டாள். சுமார் இரண்டு மணி நேரத்துக்கு முன் அவள் தன் வேலைக்காரியிடம் தனக்கு ஜுரம் என்று தெரிவித்தது இப்போது உண்மையாய்விட்டது. மனக் கவலையால் ஜுரம் வந்தவள்போல் படுத்துக் கொண்டாள். செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்த ஷண்பகவல்லிக்கு அன்று பூராவும் துக்கமும் கவலையும் வீண் கஷ்டமுமே யொழிய வேறில்லை. அவள் என் செய்வாள் பாவம்! தன் இளம் வயதில் கள்ளங்கபடமற்ற முறையில் அழகிற்சிறந்த மோகன தாஸை மனமார நேசித்தாள். அவனும் தன்னை நேசிக்கிறான் என நினைத்துச் சந்தோஷப்பட்டாள். ஆனால் அப்படி சந்தோஷப்பட்ட இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் தன்னால் நேசிக்கப்படுபவனான அவ்விளைஞன் வேறு இரு மாதர்களை நேசிப்பதாகத் தெரிந்தால் அவள் ஆடவர் உலகத்தைக் கண்டு வெறுப்பதிலும், என்? இவ்வுலக வாழ்விலேயே வெறுப்பு கொள்வதிலும், கவலைப்படுவதிலும், ஆச்சர்யமென்ன இருக்கிறது?

—:0:—

## 31-வது அத்தியாயம்

### இரவில் நடந்த சம்பவம்

முன் அத்தியாயத்தில் நாம் விவரித்த விஷயங்கள் நடந்த அதே இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு ராட்சஸ குப்பன் பல தெருக்களையும் கடந்து நந்த வனத் தெருவிலுள்ள ஒரு பெரிய மாளிகையை நோக்கிச் செல்கிறான். ஆனால் அவன் சரேலென்று தன் காரியத் தைக் கவனியாமல் யாரையோ எதிர்பார்ப்பவன்போல் அடிக் கடி பின்பக்கமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென் றான். தான் எதிர்பார்க்கும் ஆள் இன்னும் வாராததால் அதிக ஆத்திரமடைந்தான். ஒருகால் அவன் முன்னதாகச் சென்று ஏதேனும் விஷமம் செய்கிறானோ என்று சந்தே கித்தான். ஆயினும் அவர்கள் போகவேண்டிய மாளிகையில் யாருமே அவனுக்குத் தெரியாததலால் அவன் அவ்வாறு செய்திருப்பானென்று நினைக்கவும் முடியவில்லை. அவ்வாறு ராட்சஸ குப்பன் சிந்தித்துக் கொண்டிருந்தபோது அவன் எதிர்பார்க்கும் ஜெயசிங் வந்து சேர்ந்தான்.

ஜெயசிங் யார் என்பது நேயர்கள் ஞாபகத்திலிருக்க லாம். நடுக்குப்பத்தில் கோபாலன் தம்பதிகளுடைய பாழடை ந்த மாளிகையில் அடிக்கடி கூடும் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஜெயசிங்கும் ஒருவன். இவனைத்தான் இங் கிராபாயும் பிரத்யேகமாக அழைத்து ஒருமுறை ஒரு சிறு மூட்டையை யாரிடமோ கொடுக்கும்படி அனுப்பியதும் ஞாபகமிருக்கும். அவன் சுமார் இருபத்து நான்கு வய துடைய வாலிபன். ஜெயசிங் ராட்சஸ குப்பனிடம் வந்து சேர்ந்ததும் குப்பன் அவனைப் பார்த்து, "ஏன் இவ்வளவு

தாமதம்'' என்று அதட்டிக் கேட்டான், அதற்கு அவன் அலட்சியமாக, 'தாமதமென்ன? நான் உன்னைச் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு இப்பாதையில் சந்திக்க வேண்டு மென்று நீ கூறவில்லையா? இப்போதுதானே நடுநிசியாகிறது' என்று விடையளித்தான். பிறகு அவர்களிருவரும் நடந்து கொண்டே பின்வருமாறு பேசினர்:—

ஜெயசிங்;—ஏனய்யா! இப்போது நாம் மேற்கொண் டுள்ள வேலையில் நமக்கு வெற்றி கிடைக்குமா? அம் மாளி கையில் உனக்குத் தெரிந்தவர் யாருமில்லை என்று சொன் னாயே! அம்மாளிகையில் உனக்குத் தெரிந்தவர் இல்லாத போது வெற்றி கிடைக்குமா? மேலும் அம்மாளிகையில் இதற்குமுன் சென்றதில்லை என்றும் கூறியிருக்கிறாயல்லவா?

குப்பன்:—அப்படியல்ல. நாம் எத்தனை பேரை வேண்டு மாயினும் நமது பக்கம் சேர்த்துக் கொள்ளலாம். மேலும் நாம் இருவரும் போகும் காரியத்திலும் வெற்றி ஏற்படாமல் போகுமா?

ஜெயசிங்:—உனக்கு அவ்வளவு தைரியமும் நம்பிக்கை யும் இருந்தால் எனக்கென்ன பயம்! நான் நீ சொல்கிறபடி யெல்லாம் செய்யத் தயாராய் இருக்கிறேன்.

குப்பன்:—நீ என்ன இவ்வளவு பயங்காளியாய் இருக்கி றாயே. உண்மையில் உனக்கு அச்சமாய் இருந்தால் தெரி வித்துவிடு. உன்னைக் கைகழுவி விட்டுவிடுகிறேன். பயங் கொள்ளிகளுடன் சேர்ந்து எந்த வேலையைச் செய்யவும் நான் தயாராய் இல்லை.

ஜெயசிங்:—இவ்வாறெல்லாம் என்னிடம் பேசவேண் டாம். பயங்கொள்ளிகள் இங்கு யாருமில்லை. நான் சிறி தும் பயப்படவில்லை, ஆயினும் சர்வ ஜாக்கிரதையுடன்

இருக்கவேண்டு மல்லவா? அதற்காக உன்னிடம் சில விஷயங்களைக் கேட்டேன். அச்சத்துக்கும் முன் எச்சரிக்கைக்கும் மிகுந்த வித்தியாச மிருக்கிறதல்லவா? எனக்கு நீ புத்தி சொல்ல வேண்டாம். நானும் உன்னைவிட தைரியசாலிதான்.

குப்பன்:—சரி; அதிகம் பேசவேண்டாம். உன் வாயை மூடிக்கொண்டு என் பின்னாலேயே வா. நான் முன்னதாகவும் நீ பின்னதாகவும் போவோம்.

இவ்வாறு கூறிவிட்டுக் குப்பன் முன் செல்லவும் அவன் பின்னால் சிறிது தூரத்தில் ஜெயசிங் சென்றான். சுமார் ஐம்பது கெஜ தூரம் சென்றதும் அவர்கள் தாங்கள் உத்தேசித்து வந்த மாளிகையை அடைந்தார்கள் குப்பன் தன் கையிலிருந்த மிகப் பெரியதும் உறுதியுள்ளதுமான கயிற்றைச் சுவர்மேலிருந்து உள் பக்கமாகப் போட்டான். கயிற்றின் நுனியிலிருந்த ஒரு இரும்புக் கொக்கியானது சுவற்றின் உட்புறத்திலிருந்த வளையத்தில் சிக்கிக் கொண்டது. உடனே ஜெயசிங் அக் கயிற்றின்மீது ஏறி உட்பக்கமாகக் குதித்துப் பின்புற வாயிலைத் திறந்ததும் ராட்சஸ குப்பனும் உள்ளே புகுந்தான். இவ்வாறாகக் கொள்ளைக்காரர்கள் இருவரும் அம் மாளிகையில் புகுந்தனர். அது கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாகிய ஹேமவதி சீமாட்டியின் மாளிகை. அவர்களிருவரும் மாளிகையின் பின்கட்டிலுள்ள அறைகளை யெல்லாம் சோதித்துப் பார்த்தார்கள். அப்போது ஜெயசிங், 'ஓ! மாளிகையின் இந்தப் பாகம் முழுதும் சந்தடியில்லாமல் நிசப்தமாய் இருக்கிறது. ஆங்காங்குள்ள ஒன்றிரண்டு ஆட்களும் நன்றாகத் தூங்குகிறார்கள்' என்று மெதுவாக ராட்சஸ குப்பனிடம் சொன்னான். பிறகு அவர்கள் மிகக் கூர்மையான வாளைக் கொண்டும், திருட்டு சாவிகளைக் கொண்டும் அம்மாளிகையின் பற்பல அறைகளின் கதவையும் திறந்துவிட்

டார்கள். சில சமயங்களில் ஜெயசிங்கை குனியச் சொல்லி அவன் முதுகின்மீது ராட்சஸ குப்பன் ஏறவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. எனினும் இருவரும் ஒன்றன்பின் ஒன்ருகப் பல அறைகளேயும் பரிசோதித்தார்கள்.

ஆனுல் அவ்வறைகளி லெல்லாம் ஒன்றும் அகப்படவில்லே. விசேஷமான சாமான்களொன்றும் அங்கு வைக்கப்படவில்லே. சமையல் அறைக்குச் சென்றனர். அங்கும் ஏதும் அகப்படவில்லே. பிறகு அம்மாளிகையின் சேவகர்கள் தங்கி யிருக்கும் அறைக்குச் சென்ருர்கள். அங்கே வெள்ளிப் பாத்திரங்கள் இரண்டொன்றைத் தவிர வேறு எதுவும் அகப்படவில்லே. பிறகு கொள்ளேக்காரர்கள் இருவரும் மாடிக்குச் சென்ருர்கள். அங்கே பெரிய ஹாலுக்குச் சென்றதும் சிறிதுநேரம் கவனித்தார்கள். அப்போது மணி ஒன்றரை ஆகியிருந்தபடியால் நிசப்தமாக இருந்தது. மற்றும் சில அறைகளுக்குச் சென்றதில் அங்கும் விசேஷமாக எதுவும் அகப்படவில்லே யென்ருலும் அகப்பட்ட சில பொன், வெள்ளி சாமான்களே அவர்கள் சுருட்டிக் கொண்டார்கள். மற்ருெரு அறையில் ஒரு தங்கக் கடிகாரமும் மற்றும் சில சாமான்களும் அகப்பட்டன. அவைகளே யெல்லாம் கோபாலன் வாங்குவா னென்று அவர்களுக்குத் தெரிந்ததால் அதையும் எடுத்துக்கொண்டார்கள். பிறகு அவர்கள் அதனருகிலிருந்த மற்ருெரு அறைக்குச் சென்ருர்கள். ஆனுல் அவர்கள் அதில் நுழைந்ததும் திடுக்கென்று நின்றனர். ஏனெனின் அவ்வறையின் மற்ருெரு கோடியில் சிறு விளக்கு எரிந்துகொண் டிருந்தது. இதுவரை அவர்கள் பார்த்தவிடமெல்லாம் இருட்டாக இருந்து இங்குமட்டும் விளக்கு இருக்கவே அவர்கள் சிறிது திடுக்கிட்டார்கள். இருட்டா யிருந்த இடங்களில் அவர்கள் தங்கள் எவர் ரெடி மின்சார விளக்கை உபயோகித்துக்கொண்டார்கள்.

அறையில் நுழைந்த இருவரும் திடுக்கிட்டு நின்றார்க ளென்றாலும் வெளியே செல்லவில்லை. அங்கேயே அசை யாமல் நின்று உற்றுக் கவனித்தார்கள். யாரேனும் பேசும் சத்தம் கேட்டால் அங்கிருந்து போய்விடுவதென்றும், இன் றேல் அறையை யெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுப் பக்கத்து அறைக்கும் சென்று யாரேனும் அகப்பட்டால் அவர் மூலம் ரொக்கம், நகைகள் முதலியன இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்வதென்றும் இன்னும் பலவிதமாகவும் நினைத்தார்கள். இத்தகைய கொள்ளைத் தொழிலில் இறங்கி யவர்கள் முன்பின் அனுபவத்தைக்கொண்டு பலவாறு முன் யோசனை செய்துதான் எக்காரியத்தையும் செய்வார்கள். பல நிமிஷ நேரம்வரை உற்றுக் கேட்டும் யாரேனும் பேசுவது போல் தோன்றாததால் உள்ளே சென்று நாற்புறமும் பார்த் தார்கள். அந்த அறையிலிருந்து மற்றொரு அறைக்கு வழி சென்றது. அந்த வழியில்தான் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. ராட்சஸ குப்பன் மெதுவாக மற்றொரு அறை யில் எட்டிப்பார்த்தான். அங்கே ஒரு மாது ஒரு மேஜை யின் எதிரில் நாற்காலியில் உட்கார்ந்திருந்ததைக் கண்டான். அவள் கையில் புஸ்தகம் ஒன்றை வைத்துக்கொண்டிருந் தாளே யொழிய படித்துக்கொண்டிருக்கவில்லை. நாற்காலி யில் சாய்ந்துகொண்டு ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். அவள் இருந்த தோரணையில் இருந்தே அவள் சிந்தனையில் இருக்கவேண்டு மென்றே ராட்சஸ குப்பனும் தெரிந்து கொண்டான்.

அம்மாது அம்மாளிகையின் சொந்தக்காரியாகிய ஹேம வதி சீமாட்டியே. அவள் ஹேமவதியே என்பதை ராட்சஸ குப்பனும் அறிந்துகொண்டான் இதற்கு முன் அவன் அவ ளைப் பார்த்திருக்கிறானல்லவா? பத்தொன்பது வருஷங்களு

க்கு முன் ராஜசேகரன் இவனை ஹேமவதி சீமாட்டியின் குழந்தையைக் கொல்வதற்காக கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தரவிலாச மாளிகைக்கு அனுப்பினனல்லவா? அப்போது ஹேமவதி சீமாட்டி மிக்க பால்யமுடையவளாயும், கணவன் பிழைத்திருந்ததால் இன்னும் அதிக சந்துஷ்டியுடனும் இருந்தாள். அவளை ஒரு முறை பார்ப்பவர்கள் எப்போதுமே மறக்கமாட்டார்கள். மேலும் ராட்சஸ குப்பன் சமீபத்திலும் அவளைப் பார்த்திருக்கிறன். எவ்வாறெனின், அம்மாளிகையில் கொள்ளை யடிப்பதற்காக அங்கு வேலை செய்யும் எவரையேனும் சினேகம் செய்துகொள்ளும் பொருட்டு அடிக்கடி அம்மாளிகையின் பக்கம் சுற்றிக்கொண்டிருந்தான். அப்போதும் ஹேமவதி சீமாட்டியைப் பல முறைகளில் பார்த்திருக்கிறன் ஆகவே இப்போது ராட்சஸ குப்பன் அறையில் எட்டிப் பார்த்ததும் அங்கு ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருக்கும் மாது அம்மாளிகையின் எஜமானியாகிய ஹேமவதி சீமாட்டியே என்று தெரிந்துகொண்டான். அவன் அவ்வறையை நன்ருய்க் கவனித்ததில் அவள் தனியாக இருக்கிருள் என்பதையும், என்னதான் கூச்சல் போட்டாலும் அந்தச் சத்தம் வெளியில் போவதற்கு வழியில்லை யென்பதையும் தெரிந்து கொண்டான். ஆகவே இப்போது தான் எடுத்துள்ள பிரயாசையினின்றும் பெருவாரியான லாபத்தை யடையும் பொருட்டு உடனே தக்க வழியை அனுஷ்டிப்பதென முடிவு செய்தான். ஜெய சிங்கை அவன் நின்றிருக்கும் இடத்திலேயே இருக்கும்படி ஜாடை காட்டிவிட்டுத் தான் மட்டும் திருட்டுத்தனமாக அவ்வறையில் நுழைந்தான்.

ஹேமவதி சீமாட்டி உண்மையிலேயே ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்ததால் ராட்சஸ குப்பனை அவள் கவனிக்கவே யில்லை. அவளது பார்வை முழுதும் எதிரிலிருந்த புஸ்த

கத்தில் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவள் அப்புஸ்தகத்தின் பக்கங்களையும் பார்த்ததாகச் சொல்லமுடியாது. அவள் கவனமெல்லாம் ஏதோ ஒரு விஷயத்தில் சென்றிருந்தால் அவள் தேகம் மட்டும் அங்கிருந்ததே யொழிய உயிர் இருக்கவில்லை யென்றே சொல்லலாம். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. மோகனதாஸின் உருவம் தன்னைத் தூக்கிக் கொண்டுவருவதுபோல் அவளுக்குத் தோன்றியது. ஏககாலத்தில் அவள் அவனைக் காதலிக்கவும் வெறுக்கவும் செய்தாள். அவனைப் பற்றித் தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் அபாண்டமாகப் பொய் கூறியது தவறு என்று உணர்ந்து கொண்டாள். மோகனதாஸுக்குத் தெரிந்தால் அவன் தன்னைப் பற்றிய உண்மையை எல்லாரிடமும் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சினாள். உண்மையிலேயே தவறு இழைத்தவர்கள் தாங்கள் செய்தது தவறு என்று உணர்ந்துகொண்டுவிட்டால் உடனே அவர்கள் அதற்காக அச்சமும் வருத்தமும் அடைவது சகஜமல்லவா? அதுபோலவே ஹேமவதி சீமாட்டியும் தன் குற்றத்துக்காக வருந்திக்கொண்டிருந்தாள்.

மோகனதாஸின் மீது பழியைச் சுமத்துவதற்காகத் தான் செய்த யோசனைகளெல்லாம் தன்னையே தாக்கினால் என்ன செய்வது என்று அஞ்சியதுடன் ஷண்பகவல்லியிடம் பொறாமை ஏற்பட்டு அதனாலும் அவள் மனம் வருந்தியது. தனக்கு எதிரியாக அமைந்த ஷண்பகவல்லியின் விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்வது, என்ன செய்வது என்னும் யோசனையே அவளுக்கு அதிகரித்தது. அப்பெண்ணுக்கும் தன் குமாரன் தினகரம் பிரபுவுக்கும் நிச்சயார்த்தமாய் இருக்கிறதே அதை எப்படி இன்னமும் நீடிக்கச் செய்வது என்றும் யோசித்தாள். ஆகவே அவள் வருத்தம், அச்சம்,

கவலை முதலிய பல கஷ்டங்களால் வருந்தினாள். மோகனதாஸ் ஷண்பகவல்லி சம்பந்தமான விஷயங்கள் அவளை வருத்திய துடன் மற்றும் பல வேறு விஷயங்களும் அவளை அல்லற் படுத்தலாயின. அவையெல்லாம் இங்கு அதிகமாக விளக் கிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அவள் இரவு ஒரு மணிக்குப் பின்னரும் படுக்கைக்குப் போகாமல் இவ் வாறு சிந்தனையுடன் ஏன் இருந்தாள் என்பதற்குச் சில கார ணங்களை மேலே விவரித்தோம்.

அவள் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்ததாலும், ராட் சஸ குப்பன் அறையில் இருப்பதை அவள் அறியவில்லை யாதலாலும் மெதுவாக அவன் நடந்து சென்று ஹேமவதி சீமாட்டியின் ஆசனத்துக்கருகில் போய் மறைந்திருந்து திடீ ரென்று அவள் தோள்மீது கைபோட்டதும் அவள் பயந்து பீதியுடன் ஆசனத்தினின்றும் எழுந்தாள். அவள் தன் எதி ரில் காட்டுமிராண்டி போன்ற ஒரு துஷ்டன் நிற்பதைக் கண்டதும் ஓவென்று கூச்சலிட முயன்றாள். ஆனால் ராட் சஸ குப்பன், தன்கையில் கைத் துப்பாக்கியை ஏந்திய வண் ணம், 'நீ இப்போது செத்த பிணம் என்று நினைத்துக்கொள். கத்தாதே' என்று பயமுறுத்தினான். ஹேமவதி அச்சத்தால் திக்பிரமை யடைந்து இரண்டொரு நிமிஷம் வரை மூச்சுகூட விடாமல் சித்திரப்பதுமைபோல் நின்றிருந்தாள். ஆனால் அவள் சகஜமாகவே மனோ தைரியமும் துணிச்சலுமுடைய வளாதலால், மிக்க உறுதியுடனும் நிதானமாகவும் சிறிதும் அச்சமில்லாதவள்போல், 'அந்த ஆயுதத்தைக் கீழேபோடு, நான் கூச்சல் போடமாட்டேன்' என்று கூறினாள்.

அப்போது அறைக்கு வெளியில் இருந்த ஜெயசிங்கும் அவர்களருகில் வந்து நின்றான். தன் எதிரில் இரு துஷ்டர் கள் இருப்பதை ஹேமவதி சீமாட்டி அறிந்தாள். இன்னும்

சிலர் எங்கேனும் மறைந்திருக்கலாமென்று நினைத்ததால் அவர்களை எதிர்ப்பதென்னும் யோசனை முட்டாள் தனமானது என்று தெரிந்துகொண்டாள். அவள் கூச்சல்போட முயன்றாலும் அவர்கள் அவளைச் சுட்டு வீழ்த்திவிடுவார்கள் என்று அறிந்தாள். ராட்சஸ குப்பனுடைய முகத்தை ஒரு நிமிஷமும் உற்றுப்பார்க்க முடியவில்லை. அவ்வளவு விகாரமும், கொடுமையும் அவனது முகத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அப்போது ராட்சஸ குப்பன் தன் கையில் உயர்த்திப் பிடித்திருந்த கைத் துப்பாக்கியைத் தாழ்த்திவிட்டு, 'அப்படியானால் சரி, நீ அதிக தைரியமுள்ள மாதைப்போலக் காணப்படுகிறாய். தைரியம் அதிகமிருப்பதால் புத்திசாலித்தனமும் அதிகமிருக்குமென்று நம்புகிறேன், உன்னுடன் எங்கள் வியாபாரம் நடத்துவதில் அதிக தொந்தரவிராது என்று நினைக்கிறேன்' என்று கூறினான். அப்போது ஹேமவதி இன்னும் தைரியத்துடனும் தாராளமாகவும், 'உனக்கு என்ன வேண்டும்? உன்னைப் பார்க்கும்போதே நீ ஏன் இங்கு வந்தாய் என்பது நன்கு தெரிகிறபடியால் இக்கேள்வியே கேட்கவேண்டியதில்லை. ஆயினும் நான் கபடமில்லாமல் இவ்விஷயத்தில் நடந்துகொள்ள விரும்புகிறேன். ஆதலால் என்னைப் பயமுறுத்துவதுபோல் அந்த ஆயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை' என்று கூறினாள்.

அப்போது ஜெயசிங் ராட்சஸ குப்பனைப் பார்த்து, 'ஆ, இம்மாது பேசுவது ஆச்சர்யமாக இருக்கிறது. இவ்வளவு தைரியமாக மாதர்கள் பேசுவதை நான் கண்டதில்லை' என்றான். அதற்கு ராட்சஸ குப்பன், 'இம்மாது அறிவுடையவள், விஷயங்களை நன்கு அறிந்தவள்' என்று ஜெயசிங்கினிடம் சொல்லிவிட்டு ஹேமவதி சீமாட்டியைப் பார்த்து,

'அம்மணி! உன் வீட்டில் திருடும் சாமான்களுடன் நாங்கள் வெளியேறுவது நல்லதா? அல்லது நீயே ரொக்கமாகப் போதுமான அளவு பணம் கொடுத்து அனுப்பிவிடுகிறாயா? அப்படி அனுப்பிவிட்டால் நாங்களும் திருப்தியுடன் ஓடிப் போய் இன்னும் ஆறு மாதம் வரை பிரதிதினமும் நீ சுகமாக இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டே நாங்கள் இன்பமாக ஆகாரம் அருந்துவோம்' என்று தெரிவித்தான். அதற்கு அவள் ஏதோ ஒன்றை எடுக்க விரும்புவதுபோல் அங்கிருந்த சிறு விளக்கைப் பார்த்துக்கொண்டே ராட்சஸ குப்பனிடம், 'ஐயா, நான் இப்போது உங்கள் வசம் அகப் பட்டுக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு ரொக்கமாகப் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிடுவதே நலமென்று நினைக் கிறேன். ஆனல் இப்போது என்னிடம் பவுனாக அதிகமாகக் கிடையாது. உங்களுக்கு வேண்டிய பணத்தைக் கொண்டு வருவதற்காக நான் எனது பொக்கிஷ அறைக்குச் செல்ல வேண்டும்' என்று தெரிவித்தாள்.

அதற்கு ராட்சஸ குப்பன், 'நீ உன் பொக்கிஷ அறை யில் எவ்வளவு ரொக்கம் வைத்துக்கொண்டிருக்கிறாய்' என்று கேட்டகவும் அவள் சொற்ப யோசனைக்குப் பின்னர், 'சுமார் ஐந்நூறு பவுன்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்' என்று விடை கூறினாள். அதற்கு அவன், 'ஓ, அது அவ்வளவு அதிக தொகையல்ல, இப்போது உன் பணப் பையில் எவ் வளவு இருக்கிறது?' என்று கேட்டான். ஹேமவதி சீமாட்டி தைரியத்தைச் சிறிதும் இழக்காமல், தனக்கு அதிகம் தெரிந் தவர்கள் எதிரில் நிற்பதுபோல் அலட்சியமாக நின்றுகொண்டு தான் வைத்துக்கொண்டிருந்த தன் பணப்பையை ராட்சஸ குப்பனிடமே கொடுத்து, 'அதில் எவ்வளவு இருக்கிறதென் பதை நீயே எண்ணிக்கொள்' என்றாள். அப்போது ராட்சஸ

குப்பன் அப்பையிலிருந்த பணத்தை யெல்லாம் மேஜை மீது கொட்டி, பதினொரு சவரன்கள், பத்துபவுன் நோட்டு கள் இரண்டு, ஐந்து பவுன் நோட்டு ஒன்று, சில வெள்ளி நாணயங்கள் இருக்கின்றன. உன்னுடைய சாமான்கள் இதைவிட எவ்வளவோ பங்கு அதிகமான விலையுள்ளதா யிருக்கும். எதை எடுத்துக்கொள்வதென்று தோன்ற வில்லை' என்றான். அதற்கு அவள் நிதானமாக, 'என் சாமான்களெல்லாம் சமையல்காரனுடைய அறையில் இருக் கின்றன. அந்த அறையில் சமையல்காரனும் மற்றும் பன்னி ரண்டு வேலைக்காரர்களும் ஆயுதங்களுடன் படுத்துக்கொண் டிருக்கின்றனர். நீ அங்கே போனால் அவர்கள் விழித்துக் கொண்டு உன்னைத் தாக்குவார்கள் என்பது நிச்சயம்' என்று விவரமாகக் கூறினாள்.

அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த ஜெய்சிங், 'ஆ, ஆம் மாது புஸ்தகம் படிப்பதுபோல் விஷயங்களை மடமடவென்று சொல்லிவிடுகிறாளே. அகப்பட்டதை எடுத்துக்கொள்வோம் இன்று இரவு முயற்சிக்கு அவ்வளவு அகப்படுவதே போதும்' என்றான். அவன் என்ன சொல்லுகிறான் என்பதைக் கவ னிப்பதற்காக ராட்சஸ குப்பன் தன் பார்வையை அவன் பக்கமாகத் திரும்பினான். அதே நிமிஷத்தில் ஹேமவதி சிமாட்டியும் சிறு விளக்கைப் பார்த்துத் தான் தேடும் சாமான் எங்கிருக்கிறதென்று கவனித்தாள். உடனே அது இருக்கிற இடம் தெரிந்துவிட்டது. அதனால் அவள் சிறிது திருப்தி யடைந்தாள். அவள் ஆரம்பம் முதலே தைரியமாக இருந் தாளென்றாலும் சிறிது பீதியுமிருந்தது. ஆனால் இப்போது பீதி ஒழிந்துவிட்டது. அதை அவள் முகத்தோற்றத்தி லிருந்தே ராட்சஸ குப்பன் ஒருவாறு அறிந்துகொண்டுவிட் டான். தங்களைத் திடீரென்று எதிர்த்துப் போராட ஏதே

னும் யோசனை செய்துகொண்டிருக்கிறளோ என்று நினைத்தான்.

ஆயினும் ஒன்றும் சந்தேகிக்காதவன்போல் பழையபடியே அவளைப் பார்த்துக் கொண்டே, 'அம்மணி! நீயாகக் கொடுப்பதை எடுத்துக்கொண்டு போய்விடுவதென்று நானும் எனது துணைவனும் தீர்மானித்துவிட்டோம். ஆயினும் உன்னுடைய பொக்கிஷ அறைக்கு உன்னைத் தனியாக அனுப்பமுடியாது. ஏனென்றல் நீ வரும்போது சில ஆட்களை அழைத்துவந்து எங்களை இம்சிக்கமாட்டாய் என்பது என்ன நிச்சயம்' என்று கேட்டான். அதற்கு அவளும் புன் சிரிப்புடன் இத்தகைய கேள்வியை எதிர்பார்த்தவள் போல், 'என்னைத் தனியாக அனுப்புவீர்கள் என்று நான் நினைக்கவேயில்லை. இங்கிருந்து என் பொக்கிஷ அறை அதிக தூரத்திலில்லை. என்னுடன் உங்களில் யாரேனும் ஒருவர் வாலாம்' என்றுள். அப்போது ராட்சஸ குப்பன், 'சரி, நீ கூறும் யோசனையும் நியாயமானதாகவே இருக்கிறது. நீ கூறும் யோசனையால் நீ எங்களுக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாதபடி பார்த்துக்கொள்ளலாம்' என்று கூறிவிட்டு ஜெயசிங்கைப் பார்த்து, 'நீ இங்கே இரு; இதோ இந்தக் கத்தியையும் கைத் துப்பாக்கியையும் உன்னிடம் வைத்துக் கொள். அவசியம் ஏற்படும்போது அதை உபயோகிக்கச் சிறிதும் அஞ்சவேண்டாம். எப்போதும் அம்மாதின் முகத்தைப் பார்த்துக் கொண்டே நில். முகம் பார்ப்பதற்கும் அழகாகத்தான் இருக்கிறது. அவள் கத்துவதற்கு முயற்சிக்கிறுள் என்று தெரிந்தாலும் கைத்துப்பாக்கியின் முனையால் தலையில் ஓங்கி அறைந்துவிடு,' என்று விவரித்துக் கூறினன்.

ஜெயசிங்கும் ராட்சஸ குப்பனிடமிருந்து மேற்கூறிய

ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டே, அப்படியே ஆகட்டும். உன் கட்டளையின்படியே நடப்பேன் என்பதை நிச்சயமாக நம்பு' என்று சொன்னான். இவ்விருவரும் இவ்வாறு பேசியதைக் கேட்ட ஹேமாவதி சீமாட்டியின் தேகம் அச்சத்தால் நடுங்கியது. அவர்களை ஏமாற்ற முயன்றால், ஹேமாவதி நிச்சயமாகக் கொல்லப்படுவாள் என்பதை அறிவுறுத்தவே ராட்சஸ குப்பன் அவ்வாறு கூறினான். பிறகு அவன் ஹேமவதி சீமாட்டியைப் பார்த்து, 'அம்மணி! உன் பொக்கிஷ அறைக்குச் செல்வதற்கு வழி சொன்னால் நானே அங்கு போய் வருகிறேன். ஆனால் என்னைத் தந்திரமாக எந்தத் தொல்லையிலேனும் சிக்கிவைக்க முயற்சி செய்ய வேண்டாம் என்று எச்சரிக்கை செய்கிறேன். என்மீது யாரேனும் கை வைத்தால் நான் சிறிதும் தாட்சண்யமின்றி அந்த ஆளைச் சுட்டுக் கொன்றுவிடுவேன் என்பது நிச்சயம். நான் அங்கு சுடும் சத்தம் கேட்டதும் இங்கு உன்னிடம் காவலாக இருக்கும் என் நண்பன் உடனே உன்னைச் சுட்டுவிடுவான். அடுத்த நிமிஷமே நீ பிணமாகக் கீழே விழவேண்டியதுதான்,' என்று பயமுறுத்திக் கூறினான். அதற்கு அவள் மீண்டும் தைரியத்துடனும் நிதானமாகவும், 'நீ என்னை இவ்வாறு அச்சுறுத்த வேண்டியதில்லை. நான் இப்போது உங்களிடம் சிக்கிக் கொண்டிருக்கிறேன் என்று முன்னமே தெரிவித்தேனல்லவா? உண்மையிலேயே எனக்குச் சக்தி இருந்தால் நான் உங்களை எதிர்ப்பேன். ஆனால் இப்போது அசக்தளாய் இருக்கிறேன், ஆகவே நான் உங்களுடன் சமாதானத்துக்கு வந்திருக்கிறேன் என்பதை நிச்சயமாய் நம்புங்கள்' என்றாள்.

அப்போது ராட்சஸ குப்பன், 'சரி, அப்படியானால் உன் பொக்கிஷ அறைக்குச் செல்லக்கூடிய வழியைச் சொல்' இப்போதே காலம் வீணாகக் கழிந்துவிட்டது. உடனே

சொல், என்று கேட்டான். அதற்கு ஹேமவதி சீமாட்டி, நீ இப்போது எந்த வாயிலின் வழியாக இவ்வறையில் நுழைந்தாயோ அதன் வழியாகவே வெளிச் சென்றால் எதிரில் படிக்கட்டுகள் இருப்பதைக் காண்பாய். அப் படிக்கட்டுகளின் மீது ஏறிச் சென்றால் மற்றொரு மாடிக்குச் செல்லலாம். அதில் வலது கைப் பக்கமுள்ள முதல் அறையே என் பொக்கிஷ அறையாகும். இதோ இந்த சாவியை வைத்துக்கொள். இதனால் அங்குள்ள பணப்பெட்டியைத் திறக்கலாம். அதன் ஒரு மூலையில் நான் சொன்ன தொகையைப் போட்டு வைத்திருக்கிறேன். எடுத்துக் கொள்ளலாம். இதைத் தவிர நான் வேறு எதையும் சொல்ல வேண்டியதில்லை,' என்று விவரமாக வழியைக் கூறினாள். அவள் அவ்வாறு கூறும்போதெல்லாம் ராட்சஸ குப்பன் ஹேமவதி சீமாட்டியின் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தான். அவள் முகத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்படுமோ என்று கவனித்தான். ஆயினும் ஒன்றுமில்லை. ஆகவே அந்த அறைக்குப் போய்வருவதென்று முடிவு செய்தான். எனினும் சிறிய தொகையே கிடைக்கப் போகிறதே என்று அவன் வருத்தப்பட்டானென்றாலும், சாமான்களாகத் திருடி அதைப் பாதி விலைக்குக் கோபாலன் தம்பதிகளுக்கு விற்பதைவிட எளிதாகச் சிறிய தொகை கிடைப்பதே நலமென உள்ளூர சந்தோஷமடைந்தான். மேலும் சாமான்களைத் திருடிய பின்னர் அவற்றை இரத்தினபுரி நகரத்தின் தெருக்களின் வழியே எடுத்துச் செல்வதும் கஷ்டமான காரியம் என்பதையும் அவன் அறிந்து கொண்டான்.

186572

பிறகு அவன் ஹேமவதியை நோக்கி, 'அம்மணி! நான் போகுமிடத்தில் விளக்கு இல்லையல்லவா? நான் இங்கிருந்து ஒரு மெழுகுவர்த்தி விளக்கு எடுத்துப் போகலாமா?' என்று

கேட்டான். அதற்கு அவள், 'ஆம், அங்கு இருட்டாகத் தான் இருக்கும். நீ இந்த விளக்கை எடுத்துப் போகலாம்' என்று பதில் கூறினாள். அப்போது குப்பன், 'அம்மணி! நீ இங்கு தூங்காமல் உட்கார்ந்து கொண்டிருந்ததுபோல் உன் வேலைக்காரிகள் யாரேனும் விழித்துக் கொண்டிருந்து என்னைப் பார்த்துவிட்டால் என்னசெய்வது?' என்று கேட்க, அச் சீமாட்டி, 'அவர்களைத் தங்கள் அறைக்குப்போய்ப் படுத்துக் கொள்ளும்படி பல மணி நேரத்துக்கு முன்பே அனுப்பிவிட்டேன். ஒருவராவது உன்னைப் பார்க்கக்கூடிய சமயம் ஏற்படுமென்று நான் நினைக்கவேயில்லை' என்று தெரிவித்தாள். அப்போது ராட்சஸ குப்பன் உண்மையிலேயே ஒரு ராட்சஸன்போல் கொடூரமான பார்வையுடன், 'நான் போகும் வழியில் என்னை யாரேனும் பார்த்துவிட்டால் உனக்குத்தான் ஆபத்து என்பதை நினைத்துக்கொள்' என்று சீமாட்டியிடம் கூறிவிட்டுத் தன் நண்பனைப் பார்த்து, 'அப்பா! சீமாட்டியைக் கவனித்துக் கொண்டிரு. ஏதேனும் சந்தேகாஸ்பதமான சத்தம் கேட்டாலும் நீ எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது உனக்குத் தெரியுமல்லவா?' என்று சொன்னான்.

இவ்வாறு கூறிய பின்னர் ராட்சஸ குப்பன் மேஜை மீதிருந்த மெழுகுவர்த்தி ஒன்றை எடுத்துக்கொண்டு சீமாட்டி தெரிவித்த வழியே புறப்பட்டான். அவன் அறையின் வெளியே சென்றதும் தன் வழியை நோக்கிப் போகாமல் அக் கதவை மூடிக்கொண்டு அதன் ஓரத்தில் நின்று கவனித்தான். அவன் இவ்வாறு சந்தேகப்படுவதற்குக் காரணமென்ன? ஹேமவதி சீமாட்டியின் முகக்குறியிலிருந்து எத்தகைய மாறுதலும் காணப்படவில்லையென்றாலும், அவள் மனோ உறுதியுடனும் தைரியத்துடனும் இருந்ததிலிருந்தே

ஏதோ துணிச்சலான சூழ்ச்சி செய்யவே அவள் வழி தேடிக் கொண்டிருக்கிருள் என அவன் சந்தேகித்தான். தன்னை யாரிடமாவது அகப்பட்டுக் கொள்ளச் செய்யவே இவ்வாறு சூழ்ச்சி செய்து அனுப்பியிருக்கிருள் என்றும் சந்தேகப்பட்டான். ஜெயசிங்கனிடமிருந்து தப்பித்துச் செல்ல அவள் ஏதேனும் முயற்சி செய்யவும் கூடும் என்றும் நினைத்தான். ஆகவே சரேலென்று பேரய்விடாமல் சிறிது மறைவாக நின்று கவனித்தான். அவன் வெளியே சென்ற சில நிமிஷங்கள் வரை ஹேமவதி சீமாட்டி வாய் திறவாமலும், அசையாமலும் நாற்காலியில் அசைவற்றுக் கிடந்தாள். ஜெயசிங்கும் அவளது அருகிலேயே நின்று கொண்டு ராட்சஸ குப்பன் கட்டளையிட்டபடியே காவல் காத்துக் கொண்டிருந்தான். எல்லாம் தான் நினைத்தபடியே இருந்ததால் அவ்விடத்தை விட்டுப் புறப்பட அவன் தீர்மானித்து ஒரு அடி எடுத்து வைத்தபோது ஹேமவதி சீமாட்டி ஏதோ பேச ஆரம்பித்தாள். ஆகவே அவள் என்ன பேசுகிருள் என்பதை உற்றுக் கேட்டான்.

ஹேமவதி சீமாட்டி ஜெயசிங்கினிடம், 'ஐயா, நான் மூர்ச்சை யடைவதுபோல் மயக்கமாய் இருக்கிறேன். அதோ விளக்கு வைத்திருக்கும் மேஜையின்மீது கடிகாரத்துக்குப் பக்கத்தில் வெள்ளி மூடியுடன்கூடிய வாசனை புட்டியை எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று உன்னை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்' என்று கூறினுள். அவள் அப்போது உண்மையிலேயே மயக்க மடைபவள் போல் மெல்லிய குரலில் தட்டுத் தடுமாறிப் பேசியதுடன் நாற்காலியில் அப்படியே சாய்ந்துவிட்டாள். ஜெயசிங் உடனே பதில் கொடுக்கவில்லை. சிறிது நேரம் யோசித்துப் பார்த்த பின், 'அம்மணி! உன்னிடம் கொடுமையாக நடந்து கொள்ள நான் இஷ்டப்

படவில்லை. ஆனால் உன்னை விட்டுவிட்டு நான் போகவோ அல்லது நானில்லாமல் உன்னைமட்டும் அனுப்பவோ முடியாது. நீ மெதுவாக கேர்க்தேனும் அந்த மேஜையினிடம் செல்வாயாகில் நானும் உன்னுடனேயே வருவேன்' என்று கூறினன். அப்போது ஹேமவதி இன்னும் அதிக மயக்கமடைந்தவளேபோல் மெல்லிய குரலில், 'நான் உன் இஷ்டப்படியே செய்ய முயல்கிறேன்' என்று கூறிக்கொண்டே மெதுவாகத் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து ஒரு அடி எடுத்து வைக்கும்போதே கீழே விழுந்துவிடுவாளோ என்று பிறர் நினைக்கும்படி தட்டித் தள்ளாடிக்கொண்டே மேஜையை நோக்கிச் சென்றாள்.

அப்போது ஜெயசிங் அவளது அருகிலேயே நடந்து சென்றதுடன் தன் ஆயுதங்களையெல்லாம் தயாராகச் சமயத்துக்கு உபயோகிக்கும்படி வைத்திருந்தான் மறைவிலிருந்து கொண்டு இதையெல்லாம் கண்ட ராட்சஸ குப்பன், தன் துணைவன் நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டு அதிக திருப்தியடைந்தான். ஆனால் ஹேமவதி இவ்வாறு செய்வதெல்லாம் ஏதோ ஒரு தந்திரம் செய்வதற்கே என்று மட்டும் நிச்சயமாக நம்பினன். அதுபோலவே அச் சீமாட்டியின் நடத்தையில் சந்தேகங் கொண்டிருந்த ஜெயசிங்கும் 'ஆட்களை அழைப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் அந்த மணியினிடம் போகாதே. இந்தக் கத்தியை நான் என் உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? அநாவசியமான அதுவும் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கும் வேளையில் மணியை அடிப்பதற்காக ஒரு கை நீட்டப்படுமாயின் உடனே அக் கை இரு துண்டுகளாக வெட்டப்படுவதற்கே என்பது ஞாபகமிருக்கட்டும்' என்று எச்சரிக்கை செய்தான். அப்போது அவள், 'இல்லவேயில்லை. எனக்கு அப்படிப்

பட்ட எண்ணமில்லையே,' என்று கூறிவிட்டு மேஜையின்மீது இருந்த வாசனை புட்டியை எடுத்துக் கொண்டு தன் ஆசனத்துக்குப் போவதற்காகப் பழையபடி நகர்ந்து சென்றாள். அப்போது ராட்சஸ குப்பன், 'சரிதான். அவள் ஏதும் சூழ்ச்சி செய்யவில்லைபோல் இருக்கிறது. என்னைப் போன்றவர்கள் மதுபானமில்லாமல் எப்படி ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாதோ அதுபோலவே இம்மாதைப் போன்ற சீமாட்டிகள் வாசனை புட்டிகள் இல்லாமல் ஒரு நிமிஷங்கூட கழிக்கமாட்டார்கள். ஆயினும் இன்னும் ஒன்றிரண்டு நிமிஷங்கள் நின்று பார்க்கிறேன், அவள் ஒன்றும் பேசாமலிருந்தால் எல்லாம் சரியாகவே இருக்கிறதென்னும் முடிவுக்கு வரலாம்' என்று நினைத்துக் கொண்டான்.

ஹேமவதி சீமாட்டி தன் ஆசனத்தில் சாய்ந்தாள். ஜெயசிங்கோ அவளது அருகில் மிக ஜாக்கிரதையுடன் நின்றுகொண்டு அவளது முகத்தையும் கை கால்களையும் கவனித்துக்கொண்டே காவல் காத்து வந்தான். அவள் தன் எதிரிலுள்ள மேஜைமீதிருந்த ஒரு வெண்மையான கைக்குட்டையில் அத்திரவபதார்த்தத்தைச் சிறிது தெளித்தாள். அது ஏதோ அபூர்வ வாசனை என்று ஜெயசிங் நினைத்தான். அவள் தன் புட்டியின் மேல்மூடியை மூடியபோது தனக்குத் தெரியாமல் கைக்குட்டை விழுவதுபோல் அதை நழுவ விட்டுவிட்டாள். அப்போது அவள் மயக்கத்தில் விழுந்துவிட்டவள் போல் பாவனை செய்து ஜெயசிங்கினிடம், 'ஐயா நீ எனக்காக தயவு செய்து அக்கைக்குட்டையை எடுத்துக் கொடுப்பாயா' என்று கெஞ்சிக் கேட்டாள். அவள் உண்மையில் மயக்கமடைந்திருக்கிறாள் என நினைத்த ஜெயசிங் அவளிடம் பரிதாபங் கொண்டு அதை எடுக்க குனிந்தானென்றாலும் திடீரென்று தன்னை எவரும் தாக்கிவிடாதபடி மிகவும் எச்சரிக்கை

யுடன் இருந்தான். அவன் அதை எடுத்து அவள் கையில் கொடுக்கப் போனபோது அவள், 'இது அபூர்வ வாசனையை உடையது. வேண்டுமானால் நீயும் வாசனை பார்க்கலாம்' என்று மிக்க பட்சமான முறையில் சொன்னாள். அவனும் அதை வாசனை பார்க்கும் பொருட்டு மூக்கினிடம் எடுத்துச் சென்று முகர்ந்ததும் அவன் திடீரென்று மயக்கமடைந்தான். அவனுடைய கையில் இருந்த ஆயுதங்களெல்லாம் ஏககாலத்தில் கீழே விழுந்தன. அவனும் திடீரென்று பாயின்மீது விழுந்தான். அவன் அப்போது பிணம்போலக் காணப்பட்டான்.

அப்போது ஹேமவதி சீமாட்டி தன் ஆசனத்தினின்றும் எழுந்து, 'இப்போதுதான் சேவகர்களைக் கூப்பிட வேண்டும்' என்று வாய்விட்டுக் கூறினாள். ஆனால் அதே சமயத்தில் அவசாமாக ஒருவர் நடந்து வருவதுபோன்ற காலடிச் சத்தம் கேட்டது. மறு நிமிஷமே ராட்சஸ குப்பன் கோரரூபத்துடன் கண்களில் கோபத்தணல் தகிக்க அவள் எதிரில் வந்து நின்றான். அவன் தனது பொக்கிஷ அறையில் சாமான்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பான் என நினைத்த அவள், அவனைத் தன் எதிரில் கண்டதும் திடுக்கிட்டாள். ராட்சஸ குப்பனுக்கு அளவிலா ஆத்திரம் பொங்கியது. தன் கையிலிருந்த ஆயுதத்தால் அவளை ஒரே வெட்டாக வெட்டி விடுவதென்று தீர்மானித்தான். ஆனால் ஹேமவதி சீமாட்டி திடீரென்று அவன் பாதத்தில் முழங்காலிட்டுப் பணிந்து தனக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கும்படி வேண்டினாள். அப்போது அவள் அவ்வாறு கெஞ்சியிராவிட்டால் ஹேமவதி சீமாட்டியின் பிரேதத்தை அங்கு கண்டிருக்கலாம் என்பது நிச்சயம். சற்று நேரத்துக்குள் ராட்சஸ குப்பன், 'எழுந்திரு. உடனே சமாதானம் சொல்' என்று அதட்டினான். அப்

போது அவள், 'இல்லை. இல்லை. நான் ஒரு வார்த்தையும் பேச முடியாது. எனக்கு உயிர்ப் பிச்சை கொடு. தயவு செய்து என்னைக் கொல்ல வேண்டாம்' என்று மிக்க பீதியுடன் நடுங்கிக் கொண்டே கேட்டாள். அதற்கு அவன் அதிகார தோரணையில், 'சரி, நீ எழுந்திரு. உரக்கப் பேசாதே. என்னுடைய உத்தரவில்லாமல் நீ ஒரு அடியும் எடுத்து வைக்கக்கூடாது. ஏதாவது விஷமம் செய்தால் உன்னைக் கொன்றுவிடுவேன் என்பது நிச்சயம். என் துணைவனை என்ன செய்துவிட்டாய்? அவன் இறந்துவிட்டானா என்ன?' என்று பரபரப்புடன் கேட்டான். அதற்கு அவள், 'இல்லை, இல்லை. அவன் இறந்து போகவில்லை. மயக்க மடைந்திருக்கிறான். இன்னும் சொற்ப நேரத்துக்குள் ஸ்மரணையை அடைவான்' என்று தெரிவித்தாள். உடனே அவன், 'அதுவரை சந்தோஷந்தான். இவ்விஷயத்தில் நீ இவ்வளவு நல்லவளாகவாவது இருந்தாயே அதுவரைக்கும் சந்தோஷமே. இப்படிப்பட்ட சூழ்ச்சிகளைக் கையாண்டதில் நீ மிகவும் கெட்டிக்காரிதான்' என்றான். அதற்கு அவள், இவ்வாறெல்லாம் ஆபத்துக் காலத்தில் பலவிதமான எண்ணங்கள் தோன்றுவது சகஜந்தானே' என்று கேட்டாள்.

அப்போது அவன், சிறிது தூரத்தில் மல்லாந்து கிடந்த தன் நண்பன் ஜெயசிங்கைப் பார்த்தான். அப்போது அவன் மனதில் சில புதிய எண்ணங்கள் உதித்தன. உடனே அவன் அச் சீமாட்டியை நோக்கி, 'இதுவும் ஒரு நல்ல முறைதான். இதற்காகவும் நான் உனக்கு வந்தனம் செலுத்துகிறேன். இம்மாதிரி மயக்கம் கொடுக்கும் வஸ்துவின் துணையைக் கொண்டு சுலபமாய்க் கொள்ளை யடிக்கலாம். ஆனால் மயக்க மடைந்த ஆட்களை மறுபடியும் ஸ்மரணையடையும்படி செய்வதெப்படி?' என்று கேட்டான். அதற்கு அவள், 'இதனால்

மயக்க மடைந்த ஆட்கள் சில மணி நேரத்துக்குப் பின்னர் தாங்களாகவே மயக்கந் தெளிவார்கள். அப்படியில்லையென்றால் அவர்களை எழுப்ப நாம் விரும்பும்போது அவர்கள் முகத்தின்மீது தண்ணீரைத் தெளித்தாவது அல்லது அவர்கள் தேகத்தைப் பிடித்துப் பலமாக அசைத்தாவது அவர்களை எழுப்பிவிடலாம்,' என்று தெரிவிக்கவும், அப்படியானால் அதை அனுபவத்தில் பார்த்து விடுவோமெனக் கூறிக் கொண்டே தன் நண்பனிடம் செல்லக் கருதிய ராட்சஸ குப்பன், அச்சீமாட்டியிடம், 'நீ இப்போது இருக்கிற இடத்திலேயே ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும். ஒரு அடி எடுத்து வைத்தாலும்' என்று சொல்லி அவ் வார்த்தையையும் முடிக்காமல் தன் கையிலிருந்த துப்பாக்கியைக் காண்பித்தான்.

பிறகு அவன் தன் நண்பன் விழுந்து கிடந்த இடத்துக்குச் சென்று அவன் தேகத்தைப் பிடித்துக் குலுக்கினன். உடனே ஜெயசிங் பெருமூச்சு விட்டுக்கொண்டே மெதுவாக ஸ்மரணை யடைய ஆரம்பித்தான். சில நிமிஷங்களில் அவன் முழு ஸ்மரணையையும் அடைந்துவிட்டான் என்றாலும் அவனது தலைமட்டும் சிறிது பளுவாகவும் வலியுடனும் இருந்தது. அந்த வேளையிலெல்லாம் ஹேமவதி சீமாட்டி தான் முன்பு முழங்காலிட்டுப் பணிந்த இடத்திலேயே அதே நிலையிலேயே அசையாமல் இருந்தாள். ராட்சஸ குப்பன் அவளுக்குத் தெரியாதபடி, ஜெயசிங்குக் கருகில் கிடந்த, அவனுக்கு மயக்கத்தைக் கொடுத்த அந்தக் கைக்குட்டையை எடுத்துத் தன் கையில் மூடி வைத்துக் கொண்டான்.

அப்போது அங்கிருந்த நிலைமையைக் கண்ட ஜெயசிங் ஆச்சர்யத்துடன், 'இதென்ன இது' இங்கு என்ன நேர்ந்தது? இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?' என்று

மிக ஆவலுடன் கேட்டான். அதற்கு ராட்சஸ குப்பன், 'ஒன்றும் விசேஷம் நடந்துவிடவில்லை. நீ அமைதியாக இருந்து பூரணமாக உன்னை சொஸ்தப்படுத்திக் கொள். இதற்குள் நான் ஹேமவதி சீமாட்டியுடன் பேச வேண்டியதைப் பேசி முடிக்கிறேன்' என்றான். அப்போது ஜெயசிங் அதிக கோபத்துடன், 'அச் சீமாட்டி பெரிய மந்திரக்காரியாக இருக்கிறாள்' ஒரு கைக்குட்டையின் உதவியால் என்னைப்போன்ற ஒரு வாலிபனை அவள் மயக்கமாக வீழ்த்திவிட்டாளே' என்று கூறினான். அப்போது ராட்சஸ குப்பன் சீமாட்டியைப் பார்த்துக் கொண்டே, 'அம்மணி! எல்லாம் சரிதான். எங்களுக்குச் சேரவேண்டிய பணத்துக்கு என்ன சொல்கிறாய்! யாரோ வரும் சத்தம் கேட்கிறதே. 'யார் இங்கு வருவார்கள்' என்றான். அச்சமயம் சீமாட்டி திரும்பிப் பார்க்கப் போன போது குப்பன் திடீரென்று தன் கையில் மறைத்து வைத்திருந்த கைக்குட்டையை அவள் மூக்கினிடம் திணித்தான். உடனே அவள் மூர்ச்சையையாய்க் கீழே பிரேதம்போல் விழுந்தாள்.

ஹேமவதி சீமாட்டி ஸ்மரணைபெற்று விழித்தபோது சூரியோதயம் ஆகிவிட்டிருந்தது. சூரியக் கிரணம் அறையின் ஜன்னல்கள் வழியே அறையில் பிரவேசித்தது. அவள் நன்றாக விழித்தபோது அவளது எதிரில் விகாரம் பொருந்திய அக் கொள்ளைக்காரர்கள் நின்றிருப்பார்கள் என்று அவள் நினைத்தாள். ஆனால் அங்கு ஒருவரும் இருக்கவில்லை, தான் மட்டும் தனியே இருப்பதை அறிந்தாள். அவள் தலையும் தேகமும் பளுவாயும் வலியாகவும் இருந்ததால் அவள் மெதுவாக எழுந்து அருகிலிருந்த சோபாவில் படுத்துக் கொண்டு, துடித்துக் கொண்டிருக்கும் தன் நெற்றியில் தன் ஐந்து விரல்களையும் ஊன்றிக் கொண்டாள். அப்போது

என்ன நடந்தது என்பதுபற்றிச் சிந்தித்தாள். பிறகு அவள் சோபாவிலிருந்து எழுந்து பார்த்ததில் விஷயத்தை உணர்ந்தாள். மேஜைமீதிருந்த மயக்கம்தரும் வஸ்துவைக் கொண்ட புட்டியைக் காணோம். அறையிலிருந்த விலையுயர்ந்த சாமான்கள் ஒன்றுமே இல்லை. அது மட்டுமா? அவளுடைய வாழ்க்கையிலேயே முதலாவது முறையாக அவள் தேகத்திலிருந்த நகைகளெல்லாம், தங்கக் கைக்கடிகாரம், சங்கிலி, மோதிரங்கள் முதலியனவும் கொள்ளை யடிக்கப்பட்டிருந்தன. பிறகு அவள் கவலையுடனும் பீதியுடனும் தன்னுடைய வேலைக்காரியின் அறை ஒன்றுக்குச் சென்றாள். அங்கு அவள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தபடியால் வீடு கொள்ளை யடிக்கப்பட்டது என்று தெரிவித்தாள். இதர வேலைக்காரர்களும் ஒன்றாகக் கூடினார்கள். சொற்ப நேரத்துக்குள் மாளிகை முழுதும் ஒரே கூச்சலாகவும் குழப்பமாகவும் இருந்தது. எல்லாருடைய முகத்திலும் கவலையும் பீதியும்தான் காணப்பட்டது. தினகரம் பிரபுவின் வேலைக்காரன் தன் எஜமானனிடம் இச்செய்தியை அறிவிக்கச் சென்றான். ராஜேஸ்வரி, கற்பகத்தினிடம் சொல்லவும் அவர்களுடைய அந்தரங்க வேலைக்காரியான பார்வதி சென்றாள். இதற்கிடையில் ஹேமவதி தன் வேலைக்காரிகள் ஐந்தாறு பேருடன் தன் படுக்கை யறைக்குச் சென்றாள். அங்கும் திருடர்கள் இல்லையென்றாலும் அங்கு சாமான்கள் தாறுமாறாய்க் கிடந்ததிலிருந்து அந்த அறை முழுதும் கொள்ளை யடிக்கப்பட் டிருக்கிறதென்பது தெரிந்தது. அவள் பெட்டியிலிருந்த ரொக்கம், விலையுயர்ந்த வைர நகைகள், மற்றும் பல சாமான்கள் ஆகிய எல்லாம் கொள்ளை யடிக்கப்பட்டுவிட்டன.

அன்று இரவு நடந்த சம்பவங்களின் விவரத்தை அதிகமாகச் சொல்லாவிட்டாலும் முக்கியமாகத் தெரிவிக்க வேண்

டிய விஷயம் என்னவென்றால் தினகாம் பிரபுவின் ஆள் திரும்பிவந்து தன் எஜமானியிடம், தினகாம் பிரபு ராத்திரி முழுதும் மாளிகைக்குத் திரும்பி வரவில்லை என்று தெரிவித்தான். ஹேமவதி சீமாட்டி நீண்ட நேரம்வரை மயக்கத்தில் கிடந்து பிறகு எப்போதோ ஸ்மரணை பெற்றுக் கூச்சலிட்டதால், திருடன் விழுந்து ஆறு மாதத்துக்குப் பிறகு நாய் குரைத்ததுபோல், அவர்கள் எப்போதோ தப்பித்துவிட்டிருந்தார்கள். ஹேமவதி சீமாட்டி இரவு நடந்த விவரத்தை வீட்டிலுள்ளாரிடம் தெரிவித்தபோது, தான் ஒரு புட்டியில் மயக்க மருந்து வைத்திருந்ததைத் தெரிவிக்க மனமில்லாதவளாய், அவள் இரவில் ஏதோ ஒரு புஸ்தகத்தை அதிக உற்சாகத்துடன் கவனம் முழுதும் செலுத்திப் படித்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது இரு கள்வர்கள் உள்ளே நுழைந்து தனக்கு ஒரு அடி பலமாகக் கொடுத்ததாகவும், அதனால் அவள் மூர்ச்சையாய் விழுந்துவிட்டதால் பின்னர் என்ன நேர்ந்ததென்னும் விவரம் அவளுக்குத் தெரியாதென்றும் சொல்லிவிட்டாள்.

பிறகு வேலைக்காரர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு மாளிகை முழுதையும் சோதனை போட்டார்கள். எல்லா அறைகளிலுமே திருடர்கள் புகுந்து ஆங்காங்குமுள்ள விலையுயர்ந்த சாமான்களை யெல்லாம் கொள்ளையடித்து விட்டார்கள். தோட்டத்தின் பின் புறவாயில் திறக்கப்பட்டிருந்ததால் கொள்ளைக்காரர்கள் அதன் வழியாகவே வந்து அதன் வழியாகவே போயிருக்கவேண்டுமென்று தெரிந்தது. உடனே இந்த விஷயம் போலீசாருக்கு அறிவிக்கப்பட்டது. இரண்டு துப்பறியும் உத்தியோகஸ்தர் அங்கே விசாரணை செய்ய வந்தார்கள். பின்புற வாயில் கதவு திறக்கப்பட்ட விதத்திலிருந்தே மாளிகையிலுள்ள வேலைக்கார

களின் துணை திருடர்களுக்கில்லை யென்றும், வெளியி லிருந்து பலாத்காரத்தை உபயோகித்தே அவர்கள் வந்திருக்க வேண்டுமென்றும் துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் முடிவு செய்து அதைப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அறி வித்தனர். ஹேமவதி சீமாட்டியை அவளுக்குத் தெரிந்த வரையில் முன்னாள் இரவு நடந்ததை யெல்லாம் விவரமாகக் கூறும்படி கேட்டார்கள். அவள் அந்த இரு திருடர்களின் அங்க அடையாளங்களையும், உடைகளையும் விவரித்துக் கூறி னாள். அவள்கூறிய அங்க அடையாளங்களிலிருந்தே அந்த அனுபவம்வாய்ந்த துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் அவர்க ளில் ஒருவன் ராட்சஸ குப்பனாகத்தான் இருக்கவேண்டு மென்று முடிவு கட்டினார்கள். மற்றொருவன் இன்னவ னென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஹேமவதி சீமாட்டி அநாவசியமாக மோகனதாஸின் மீது பழி சுமத்தியதால் அவளுக்கு இறைவன் இந்தத் தண்டனையை விதித்தான் போலும்! ஜெயசிங் மயக்க மடையும்படி செய்வதற்கு அவள் உபயோகித்த மருந்தே அவளுக்கும் தீமையைக் கொடுத்து விட்டது.

—:o:—

## 31-வது அத்தியாயம்

### டாக்டர். குண சிங்கம்

இரத்தினபுரியில் பிரசித்தி பெற்ற டாக்டர்களில் இத் தலைப்பிலுள்ள பெயரைக் கொண்டவரும் ஒருவர். அவர் அதிக வரும்படி உடையவராக இருந்தாலும் வீண் ஆடம்பரங்களில் பணத்தைச் செலவழிக்காமல் எளிய வாழ்க்கையை அனுஷ்டித்து வந்தார். அவருடைய மாளிகை

மிக அழகானதாயும் பெரியதாயும் இருந்த தென்றாலும், அதிகமான ஆட்களை வேலைக்கு வைத்துக் கொள்ளாமல் நான்கு பேரை மட்டும் அமர்த்திக்கொண்டிருந்தார். ஆனால் அவ்வளவு பெரிய மாளிகை அவர் சேர்த்து வைத்த மிக விசித்திரமான பொருள்களைக் காட்சியில் வைப்பதற்கே யாம். வைத்தியம், ரண சிகிச்சை, தேகக் கூறுபாடு சாஸ்திரம் சம்பந்தமான சாமான்கள் அங்கு வைக்கப்பட்டு வந்தன. பல பிரேதங்களும், தோல் எடுக்கப்பட்ட தேகங்களும், குழந்தைகளின் பிரேதங்களும், மற்றும் பல பயங்கர சாமான்களும் அக்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. அந்த அறைகளில் வேலைக்காரர்களும் அதிகமாகப் பிரவேசிக்க மாட்டார்கள். ஏனெனின் அங்கு பேய் பிசாசு முதலியன இருக்கு மெனச் சொல்லி டாக்டர் அவர்களைப் பயமுறுத்தி வைத்திருந்தார். வீட்டு வேலைக்காரி நல்ல பகலிலும் கூட அங்கு பெருக்கச் செல்லவும அஞ்சுவாள். இரு பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து அங்கே போய் இருந்து அந்த அறைகளை யெல்லாம் சுத்தம் செய்வார்கள்.

உண்மையிலேயே அவரது பொருட் காட்சியில் வைக்கப்பட்டிருந்தவைகளை மனோபல மில்லாதவர்களும் பயங்காளிகளும் பார்த்தால் திடுக்கிட்டுவிடுவார்கள் என்பது நிச்சயம். பற்பல தேசத்தினரின் பிரேதங்களும் அங்கு இருக்கும். அவை கண்ணாடிப் பெட்டிகளில் நிற்க வைக்கப்பட்டு பொய்க் கண்கள் வைக்கப்பட் டிருக்குமாதலால், இறந்துபோனவரின் பிரேதமே அங்கு வந்திருக்கிறதோ என்று கண்டோர் மனங் கலங்குவர். இன்னும் இரட்டைத் தலை மனிதர்கள், ஒரு தலை இரண்டு தேகமுடையவர்கள் முதலிய ஆச்சர்யப் பிறவிகளின் பிரேதங்களும் அங்கே இருக்கும். டாக்டர் குணசிங்கம் இயற்கைச் சாஸ்திர நுண்மைகளைக் கண்டுபிடிக்க முயற்சி

செய்ததால் அவர் இப்படிப்பட்ட விசித்திரமான பொருட் காட்சியை அமைத்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது. அவர் இயற்கை சம்பந்தமான பல ஆராய்ச்சிகளைக் கண்டு பிடித்தாரென்றாலும் அவர் பேரையோ புகழையோ விரும்ப வில்லை யாதலால் அதிகம் புகழ் கிடைக்கவில்லை. ஆயினும் அவர் ஆராய்ச்சி செய்து பல நுணுக்கங்களை வெளியிட்ட தால் அவர் பலருக்குத் தெரியலானார். வைத்தியத்திலும் சிறந்தவராயிருந்ததால் பலரும் அவரிடம் வந்து சிகிச்சை செய்து கொண்டனர். சிகிச்சைக்கு அவர் அதிக பணம் வாங்குவாராதலால் ஏராளமான சொத்து இருந்தது. அவர் எளிய வாழ்க்கை நடத்துபவராதலால் இவ்வளவு பணம் அவ ருக்கு ஏன் என்று கேட்கலாம். தற்காலச் செல்வர்கள் பலர் நூற்றுக் கணக்கான ரூபாய்களை வீண் விஷயங்களில் செல வழிப்பது போல் அவர் நூற்றுக் கணக்கான ரூபாய்களைக் கொடுத்துத் தன் பொருட் காட்சிக்குப் பலவகையான பிரே தங்களை வாங்குவார். ஏழு அடி ஏழு அங்குலம் உயரமும் விகாரத் தோற்றமும் உடைய ருஷ்யா தேச ராட்சஸன் இறந்து போனபோது அவனுடைய பந்துக்களுக்கு நூற்றுக் கணக்கான ரூபாய்களைக் கொடுத்து அப் பிரேதத்தை விலைக்கு வாங்கினார். இரண்டு அடி ஆறு அங்குலம் உயரமே உள்ள ஜர்மன் தேசக் குள்ளனின் பிரேதத்தையும் அதிக விலை கொடுத்து வாங்கியிருந்தார். இவ்வாறே அவர் பணம் கொடுத்து வாங்கியுள்ள பிரேதங்களின் சரித்திரத்தை வர்ணித் துக் கொண்டே போனால் அது மட்டும் ஒரு தனி அத்தியாய மாக முடியும்.

டாக்டர் குணசிங்கத்துக்குச் சுமார் நாற்பத்தைந்து வயது இருக்கும். அவர் நடுத்தரமான உயரமானவராயும், மெல்லிய தேகத்தை யுடையவராயும், வெளுத்துப்போன

முகத்தை யுடையவராயும் இருந்தார். அவர் பாலியம் முதலே ஆழ்ந்த சிந்தனையிலும், தொடர்ச்சியான படிப்பிலும் மூழ்கி இருந்திருக்க வேண்டுமென்பதை அவரது முகத் தோற்றத்தி லிருந்தே தெரிந்து கொள்ளலாம். மாதர்களின் மனதை வசீ கரிக்கும் சக்தி அவரிடம் சிறிதும் இருக்கவில்லை யென்றே சொல்லலாம். அவருக்குக் கலியாணம் ஆகவில்லை. ஆயுள் முழுதும் அவர் பிரம்மசாரியாகவே இருப்பாரென்றும் நினைக்க இடமிருந்தது. ஆனால் இப்படிப்பட்ட சுபாவத்தையுடைய அந்த மனிதரும் ஒருத்தியைக் காதலியாமலோ அல்லது அவ ளால் காதலிக்கப்படாமலோ இருக்கவில்லை. பல வருஷங் களுக்கு முன்னர் காதல் காரணமாய்த் தன் மனத்தில் நுழைந்து கொண்ட ஒரு மாதின் உருவம் மட்டும் இன்னும் அழியாமலேயே இருந்தது. அவர் அவ்வாறு அந்தாங்கத் தில் ஒரு மாதின் ஞாபகமாகவே இருக்கிறார் என்பதை யாரும் அறியமாட்டார்கள். அவர் பெண்கள் வாசனையே வேண் டாதவர் போலத்தான் காலங் கடத்தினர். ஆனால் அவர் தன் பொருட்காட்சியின் மத்தியில் உட்கார்ந்து கொண்டு பல விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும்போது திடீரென்று அவரது மனதில் தன் பழைய காதலின் ஞாப கம் வந்துவிடும். அவளது உருவமே தன் எதிரில் வந்து நிற்பதுபோல் தோன்றும். ஆயினும் அவர் அதையெல்லாம் அடக்கும் சக்தி யுடையவராதலால் அடக்கிக் கொண்டு எத் தகைய ஞாபகமு மடையாதவர்போல் தன் ஆராய்ச்சி வேலை யில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுவார்.

ஒரு நாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு அவர் தன் பொருட்காட்சியின் மத்தியில் உட்கார்ந்து கொண்டு எதையோ ஆராய்ந்து கொண்டிருந்தபோது அவருடைய சேவகர்களில் ஒருவன் அங்கே வந்து, வெளியில் யாரோ

ஒரு மாது வந்து காத்துக்கொண்டிருப்பதாயும், அவள் அவரைக் காண விரும்புவதாயும் தெரிவித்தான். அப்போது அவளுடைய பெயர் என்னவென்று டாக்டர் கேட்டதற்குச் சேவகன், அவள் தன் பெயரைச் சொல்லவில்லை யென்றும், அவள் புதியவளாதலால் பெயர் சொல்வதில் பயனில்லை யென்றும், சொற்ப நேரம் சந்தித்துப் பேசினால் போதுமென்றும் சொன்னதாகவும் தெரிவித்தான். அதன்மீது அம்மாதை உள்ளே அழைத்து வரும்படி டாக்டர் கட்டளையிடவும் சொற்ப நேரத்துக்குள் அந்தச் சேவகன் முகமூடி யணிந்து உச்சந் தலைமுதல் உள்ளங் கால்வரை ஒரு போர்வையையும் அணிந்து கொண்டிருந்த ஒரு மாதை உள்ளே அழைத்து வந்தான். சேவகன் வெளியே சென்றதும் டாக்டர் அவளுக்காக ஒரு ஆசனத்தைக் கொடுத்தார். அவள் அழகான உடைகளை யணிந்து கொண்டிருந்தாளென்றாலும் தான் இன்னவளென்று தெரிவிக்கக்கூடாதென்னும் எண்ணத்துடன் வேறு யாரைப் போலவோ வேஷம் போட்டுக் கொண்டது போலவும் காணப்பட்டது. அவள் தன் முகத்தை மறைத்துக் கொள்ள விரும்பியதால் கருமையான முகமூடியை ஒரு கையால் நன்றாகப் பிடித்துக் கொண்டிருந்தாள். அவள் உயரமானவளாயும், நன்றாக வளர்ச்சி பெற்ற அங்கங்களை யுடையவளாகவும் இருந்தாள். அவள் பாவனைகளிலிருந்தே அவள் பெரிய இடத்து மாது என்றும் தெரிந்தது.

அவள் ஆசனத்தில் அமர்ந்ததும் டாக்டர் குணசிங்கத்தின் மனதில் அவருக்கும் தெரியாமல் ஏதோ ஒருவிதமான உள்ளக் கிளர்ச்சி தோன்றியது. அவள் தான் புதியவளென்று தெரிவித்திருந்தாலும் அப்படியிருக்க முடியாதென்றும் தனக்கு நன்றாகத் தெரிந்த யாரோ ஒரு மாதாகவே இருக்க வேண்டுமென்றும், அதுமட்டு மன்றி அவளுக்கும்

தனக்கும் ஏதோ சம்பந்தமும் இருக்க வேண்டுமென்றும் உணர்ச்சி உண்டாயிற்று. அம்மாது தன் முகமூடியை எடுக்காமல் இருக்கும்போதும், வாய்திறந்து ஒரு வார்த்தையேனும் பேசாமல் இருக்கும்போதும் டாக்டராக அவளைப் பற்றி இவ்வாறெல்லாம் நினைத்ததைக் கண்டு சிலர் ஆச்சர்யப்படலாம். ஆனால் காதல் விஷயத்தில் ஈடுபட்டவர்களுக்கு இது ஆச்சர்யமாகத் தோன்றாது. உண்மையான காதல் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஆடவனும் மாதும் முதல் முறை ஒருவரையொருவர் சந்திக்கும்படி சந்தர்ப்பம் ஏற்பட்டாலுங்கூட அப்போதே அவர்களுடைய மனதில் பரஸ்பரம் அன்பு ஏற்படுகிறது. பிறகு ஆடவனோ, மாதோ ஒருவரையொருவர் காணும்போது அந்தப் பாதத்தின் அடியைக் கண்டும்கூட பரஸ்பர காதலுடையவர்கள் என்பதை தெரிந்து கொண்டு விடுகின்றனர். டாக்டர் அம்மாது தனக்குச் சம்பந்த முடையவளாகவே இருக்கவேண்டுமென்று தெரிந்தும் வாய்திறந்து பேசுவதற்கு அச்சப்பட்டபடியால் அதை ஒருவாறு அறிந்து கொண்ட அம்மாது சொற்ப நேரத்துக்குப் பின்னர், 'நான் யார் என்பதில் இன்னும் நீர் சந்தேகத்துடன் இருப்பதும் நீதியோ?' என்று கேட்டாள். அக்குரல் கேட்டதும் அவரது தேகம் முழுதும் புளகாங்கிதத்தால் மயிர்க்கூச்சமடைந்த படியால் அவர், 'ஆ! அக்குரலா' என்று சொல்லிவிட்டு அதற்குமேலொன்றும் பேச முடியாமல் இருந்தார்.

அப்போது அம்மாது மறுபடியும், 'ஆம்; டாக்டர் குணசிங்கம் அவர்களே! சுமார் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் உம்முடைய தாயாருடன் ஒரே வீட்டில் கொஞ்ச காலம் வசித்த சொர்ணம் என்னும் பெயருடையவள்தான் நான். உமக்கு என் ஞாபகம் இருக்கவேண்டிய இதர விஷ

யங்களைப்பற்றி இப்போது விவரிக்கவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்' என்றாள். அதற்கு அவர், 'இல்லை, இல்லை. நான் உன்னை மறக்கவே இல்லை. உன்னை நான் மறப்பதென்பதும் முடியாத காரியம். நீ சொல்வது போலவே இந்தப் பத்தொன்பது வருஷ காலத்தையும் நானும் எவ்வளவோ கஷ்டத்துடன்தான் கழித்தேன். நான் இவ்வாறு பேசுவதுபற்றி ஆச்சர்யப்பட வேண்டாம்' என்றார். ஆனால் அவள் ஆச்சர்யப்பட்டதென்பது உண்மையே. டாக்டர் அவளிடம் அவ்வாறு பரிந்து பேசியதில் அவளுக்கு ஆச்சர்யமே உண்டாயிற்று. பத்தொன்பது வருஷங்களுக்கு முன்னர் டாக்டர் அவளை நேசித்தார் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் பத்தென்பது வருஷங்களாக அவளைக் காணாமலிருந்த பின்னரும், அவளை அடியோடு மறந்து விடாமல், பழைய காதல் கொழுந்து விட்டெரியும்படியான நிலைமையில் இருந்து கொண்டு ஆசை வார்த்தைகள் பேசுவதைக்காண அவளுக்கு ஆச்சர்யமாகவே இருந்தது. ஆகவே அவள் இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்ததால் டாக்டருக்கு உடனே பதில் கொடுக்கவில்லை.

ஆகவே அவர், 'மாதே! நீ என் பதில் அளிக்கவில்லை. உனக்குக் கோபம் வரும்படி நான் ஏதேனும் பேசி விட்டேனோ' என்று கேட்டார் அப்போது அவள், தன் முக மூடியை மட்டும் அப்புறப்படுத்தாமலே தன் வலது கையை டாக்டரிடம் நீட்டிய வண்ணம், 'இல்லை, இல்லை. உம்மிடம் கூட நான் கோபங் கொள்வேனோ?' என்றாள். டாக்டர், அவள் நீட்டிய கையைப் பிடித்து அழுத்திக்கொண்டு இன்னும் அன்பான முறையில், 'மாதே! உனக்குக் கோபம் வரவில்லை யென்பதைக்கண்டு நான் சந்தோஷப் படுகிறேன். நான் இதற்கு முன் சந்தித்த பிறகு இடையில் பத்தொன்பது

வருஷங்கள் கழிந்தன வென்றாலும் அந்தக் காலம் முழுவதிலும் நான் உன்னைப்பற்றிப் பலமுறை சிந்தித்தேனென்றால் அது என் குற்றமாகாது. அப்போது நான் இளமையுடையவனாய் இருந்தேன். இப்போது நான் பல கவலைகளில் ஈடுபட்டிருப்பதால் என்னிடம் பல மாறுதல்கள் காணப்படலாம். எனக்கு வயது நாற்பத்தைந்துதானென்றாலும் இன்னும் அதிக வயதானவனைப்போல் காணப்படுகிறேன். ஆனால் நீயோ அவ்வளவு மாறுதலடைந்திருக்க வேண்டியதில்லை. ஏன் இன்னும் முக மூடியை அணிந்து கொண்டிருக்கிறாய்? ஆயினும் பாதகமில்லை. என் மனக்கண்ணால் உன் அழகிய முகத்தைக்கண்டு களிக்க என்னால் முடியும்!' என்று கூறினார். அப்போது அவள் அதிக பிரமையுடன், 'இவ்வளவு காலங் கடந்த பின்னரும் நீங்கள் அடிக்கடி என்னைப்பற்றி நினைத்திருக்க முடியுமோ' என்று கேட்டாள். அதற்கு டாக்டர் உடனே பதில் அளிக்கவில்லை. சொற்பநேரம் ஆழ்ந்து சிந்தித்த பின்னர் மெல்லிய குரலில், 'நான் உன்னைத் தவிர்த்து இவ்வுலகில் வேறு யாரையும் காதலித்ததில்லை' என்று சொன்னார்.

அப்போது அவள், 'உங்கள் தாயாரின் வீட்டில் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் சந்தித்த பிறகு இதற்கு இடையில் நீர் என்னை எப்போதும் சந்திக்கவே யில்லையா? அல்லது என்னைச் சந்தித்ததாக நினைத்ததும் இல்லையா?' என்று கேட்டுவிட்டு அவரது முகத்தில் என்ன மாறுதல்கள் ஏற்படுகிற தென்பதை அறிவதற்காக அவரது முகத்தைக் கூர்ந்து கவனித்தாள். அதற்கு அவர், 'இல்லை. நான் ஒரு முறையேனும் பார்க்கவில்லை. நீ இரத்தினபுரியிலேயே வசிக்கிறாயா? அல்லது அடிக்கடி இந்த நகரத்துக்கு வருவதுண்டா? இம்மாதிரி யெல்லாம் கேள்வி கேட்பதற்காகக்

கோபிக்க வேண்டாம். ஆரம்பம் முதலே உன் வாழ்க்கை இரகசியமானதாகவே இருக்கிறதென்பதை நான் அறிவேன். என்ஞல் உனக்கு ஏதேனும் தொந்தரை ஏற்படுமாயின் அதை நீக்குவதற்காக நான் என் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்' என்று கூறினர். அப்போது அம்மாது மீண்டும் தன் கையை அவரது பக்கம் நீட்டி, 'ஆ! தாராள மனமுடையவராய் இருக்கிறீரே! நீங்கள் இவ்வளவு அன்புடன் என்னை வரவேற்பீர்களென்று நான் நினைக்கவேயில்லை. இவ்வளவு காலம் இடையில் கழிந்து விட்டதால் என்னை நீங்கள் மறந்து விட்டிருப்பீர்கள் என்று நினைத்தேன். ஆனல் ஒரு சந்தர்ப்பத்தை மட்டும் நீங்கள் மறக்க முடியாமல் அப்போதைக் கப்போது நினைத்துக்கொள்வீர் என்ருலும் வாழ்க்கை என்னும் சமுத்திரத்தின் அலையில் அது ஒரு சாதாரண சந்தர்ப்பமாகவே கருதப்பட்டு விடுமோ என்று அஞ்சினேன்' என்ருள்.

அப்போது அவர் அவளது கையைப்பிடித்துக்கொண்டு தன் இருகாங்களாலும் அழுத்திக்கொண்டே, 'அப்படியல்ல, பல வருஷங்களுக்கு முன் நீ என் தாயாருடன் வசித்திருந்த காலத்தை நினைக்கும்போதே எனக்கொரு கிளர்ச்சி ஏற்படுகிறது. என் தாயாரும் எப்போதோ இறந்து விட்டாள். ஆயினும் நீ அவளுடன் வசித்திருந்தது மட்டும் என் ஞாபகத்திலிருந்து நீங்கவே இல்லை. இப்போது நான் அதைச் சொல்வதால் நீ வேறுவிதமாய் நினைக்கவேண்டாம். இப்போது நான் கிழவனுய்விட்டேன்' என்று கூறினர். அச்சமயம் 'அவள், 'டாக்டர் குணசிங்கம் அவர்களே! நீங்கள் என்னிடம் இவ்வளவு தாராளமாக நடந்துகொண்ட பின்னரும், எனக்கு நன்மை செய்வதற்காக உங்கள் உயிரையே தியாகம் செய்யத் தயாரா யிருக்கும்போதும், என் உருவம்

உங்கள் மனக்கண் முன் நிலைத்திருக்கும்போதும் நான் இன்னமும் முகமூடி யணிந்திருப்பது தகாது' என்று கூறி முடிக்கு முன்னர் டாக்டரும் மிக ஆவலுடன், 'ஆ! உன் அழகிய முகத்தை மீண்டும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாயின் இவ்வாழ்க்கையில் இதுவரை நான் அனுபவியாத சந்தோஷத்தை யடைவேன் என்பது திண்ணம்' என்று கூறவே அம்மாதும் மெதுவாகத் தன் முகமூடியை அப்புறப் படுத்தினள்.

அவளது உருவத்தைக் கண்டதும் டாக்டர் ஆச்சர்ய மடைந்தார். பத்தொன்பது வருஷங்களுக்கு முன் தன் தாய் வீட்டில் கண்டபோது எவ்வாறு அழகுடன் இருந்தாளோ அதேமாதிரி இப்போதும் இருந்ததால் இடையில் அவ்வளவு காலம் கழிந்ததென்பது கனவோ என்றும் நினைத்தார். இந்த இடைக்காலத்தில் அவளிடம் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருக்குமாயின் அது அவளுடைய அழகையும் வசீகரத்தையும் அதிகப்படுத்திற்று. அந்த இளமை என்பது சிறிது மாறியிருந்ததென்றாலும் கண்களின் பிரகாசமோ, கூந்தலின் கருமையோ, அதரத்தின் சிவப்போ கொஞ்சமும் குறையவில்லை. அவர் 'ஆ! அதே உருவம், அதே அழகு' என்று கூறிக்கொண்டே உற்சாக மிகுதியால் மயக்க மடைபவர்போல் இருந்தார். அப்போது அவள் அவரிடமிருந்து இப்போதாவது நிச்சயமான பதிலை எதிர்பார்ப்பவள்போல் மறுபடியும், 'நீர் என்னைப் பிற்பாடு ஒரு முறைகூடப் பார்க்கவில்லையா?' என்று வற்புறுத்திக் கேட்டாள். அப்போது அவர், 'இல்லவே இல்லை. ஆனால் நீ கேட்கும் கேள்வியிலிருந்து நீ இரத்தினபுரியிலேயே வசிப்பவளாகவோ அல்லது அடிக்கடி விஜயம் செய்பவளாகவோ இருக்க வேண்டுமென்று தெரிகிறது. நீ அடிக்கடி இந்தப்பக்கம் வருவதா

கவே வைத்துக் கொண்டாலும் என்னைப் பார்த்திருக்க முடியாது. ஏனெனின் நான் அதிகமாக வெளியில் வருவதில்லை. நான் எங்கும் தேக் கச்சேரிக்கோ, அல்லது விளையாட்டாகக் காலங் கழிப்பதற்கோ போவதில்லை. என் வீட்டுக்கு வர முடியாத நோயாளிகள் வீட்டுக்கு மட்டும் என் வண்டியில்போய் உடனே நேராக என் மாளிகைக்கு வந்து விடுவேன். மேலும் வண்டியில் போகும்போதும் வரும்போதும் கூட நான் கையில் எடுத்துச் செல்லும் புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதால் ரஸ்தாவில் யார் போகிறார்கள் அல்லது வருகிறார்கள் என்பதையும் நான் கவனிப்பதில்லை. ஆதலால் நீ என் வண்டியின் பக்கத்திலேயே நடந்திருந்தாலும் நான் உன்னைப் பார்க்க முடிந்திராது. என்மீது அவநம்பிக்கைவேண்டாம். என்னால் உனக்கு எத்தகைய கஷ்டமும் ஏற்படாதென்பதை நிச்சயமாக நம்பு. உன் ரகசியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணமும் எனக்கில்லை. நீ மறுபடியும் உன் முகத்தைக் காண்பித்ததற்காக நான் மிக சந்தோஷப் படுகிறேன்! என்று கூறினார்.

அப்போது அம்மாது, 'நான் திடீரென்று இப்போது இங்கு வந்ததால் நீங்கள் ஆச்சர்யப்படவில்லையா?' என்று கேட்டாள். அதற்கு டாக்டர், 'ஆம்; இப்போது நீ வந்ததில் ஆச்சர்யப்படுகிறேன் என்றாலும் நாம் இருவரும் எப்போதாவது ஒரு காலத்தில் சந்திப்போம் என்னும் திடமான நம்பிக்கை எனக்கு இருந்து வந்தது. ஆனால் அந்த நம்பிக்கை உண்டானதன் காரணம் எனக்கே விளங்கவில்லை. ஆகவே அந்த நம்பிக்கையின்படி இன்று நாம் பரஸ்பரம் சந்திக்க நேர்ந்ததைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால் இங்கிருந்து நீ பிரிந்துபோகும் போது நான் கவலைப்பட மாட்டேனென்றாலும் இங்கு நீ வந்து போன ஞாபகம்

எனக்கு எப்போதும் இருக்கும். என் வயதுக்குத் தக்க படியும், உன் அந்தஸ்துக்குத் தக்கபடியும் நான் பேசிக் கொண்டிருக்கிறேன் என்பதை நீ அறிகிருய் என்றே நினைக் கிறேன். உன் தோற்றத்திலிருந்தே நீ ஏழையாகவோ அல்லது நடுத்தர நிலைமையிலோ இருப்பதாகத் தெரியவில்லை. நீ யார், உன் அந்தஸ்து என்ன என்பதை நீ என்னிடம் இது வரை கூறியதுமில்லை. அதைக்கேட்க நான் ஆவல் கொண்டதுமில்லை. இப்போதும் அதைக் கேட்பதாக என் உத்தேசமில்லை. அதெல்லாம் உன் இரகசியங்களாக இருக்கும். ஆகவே அந்த இரகசியம் அதிக மதிப்பு வாய்ந்ததாகவே நானும் கருதுகிறேன். பிறருடைய விஷயங்களை அதிகமாகத் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் சுபாவம் எனக்குக் கிடையாது இவ்வளவு நீளமாக நான் பேசியதற்காக மன்னிக்கவும். நீ இப்போது ஏன் வந்தாய் என்பதை என்னிடம் தாராளமாகச் சொல்லலாம் என்பதற்காகவே நான் இவ்வளவு தூரம் பேசினேன். இப்போது அதிலும் இந்த இரவில் இங்கு வந்ததற்கு ஏதேனும் காரணமிருக்க வேண்டுமல்லவா?' என்று விவரமாகக் கூறினன்.

அதற்கு சொர்ணம் என்று பெயரைக் கூறிக்கொண்ட அம்மாது, 'டாக்டர் குணசிங்கம் அவர்களே! நீங்கள் அதிக புத்திசாலி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நம்மிடையே நீண்ட காலத்துக்கு முன் ஏற்பட்ட சிநேகத்தை உயிர்ப்பிப்பதற்காக மட்டும் நான் இங்கே வரவில்லை. உங்கள் தொழில் முறையில் கண்டு பேசவே நான் வந்தேன். நீங்கள் இவ்வளவு அன்புடனும் தாராளமாகவும் என்னை வரவேற்பீர்களென்று நான் கருதவேயில்லை. முன்பின் அறியாதவர்களைப்போல் நாம் இன்று பேசிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். ஆனல் அது வேறுவிதமாக முடிந்துவிட்டது.

ஆகவே நான் என் வேலையைச் சொல்லிக் கொள்வதில் கஷ்டம் அதிகம் இல்லாமல் போய்விட்டது. நீங்கள் இவ்வளவு பிரபல மடைவதற்குமுன் அதாவது பத்தொன்பது வருஷங்களுக்கு முன் நான் உங்கள் தாயாருடன் உங்களைச் சந்தித்த போது வசித்த சிறிய வீட்டிலும் ஒரு சிறிய ரசாயன சாலையை வைத்துக் கொண்டிருந்தீர் அல்லவா?' என்று கேட்டாள். அதற்கு அவர், 'ஆம்; வைத்துக் கொண்டிருந்தேன். அந்த இடத்தைவிட்டு இம்மாளிகைக்கு வரும்போது நான் என்ன கஷ்டப்பட்டேன் தெரியுமா? அங்கேதானே நான் உன்னைச் சந்தித்தேன். அதை விட்டுவர எனக்கு மனம் வருமா? என் ரசாயன சாலையில் ஒருநாள் காலைப்பொழுது முழுதும் நீ என்னுடன் இருந்து நான் செய்யும் ரசாயன ஆராய்ச்சியில் நீயும் உன் புத்தியைச் செலுத்தினையே. அதனல் என் அன்பு இன்னும் அதிகமாய்ப் போய் உன்னை மனமார நேசிக்க ஆரம்பித்தேன்' என்று கூறியதும், அம்மாது, 'ஆம், மிக சந்தோஷம். அப்போது என் வேண்டுகோளுக்கிரங்கி சில ரசாயன முறைகளை எனக்கு ரகசியமாகக் கற்றுக் கொடுத்தீரல்லவா? அதனல் குளோரோபாரம் எஸ்ஸென்ஸ் என்னும் மயக்கம்தரும் திரவ பதார்த்தத்தை மிக வாசனையுடன் செய்ய முடிந்தது. அந்த புட்டி ஒன்றை நான் வைத்துக் கொண்டிருந்தபோது அது களவு போய்விட்டது. அதைக் களவாடியவர்கள் அதைக் கொண்டு எப்படிப்பட்ட அக்கிரமத்தையும் செய்வார்களாதலால் அது வெளிப்பட்டுப் போய் தெய்வாதீனமாக அத்தகைய திரவம் செய்தது யார் என்று உம்மிடம் பரிசிலனைக்கு வந்தால், நீர் பல வருஷங்களுக்கு முன் இதைச் செய்ய யாரோ ஒரு மாதுக்குக் கற்றுக்கொடுத்ததாகவும், அவள் மூலம்தான் அது வெளிவந்திருக்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டால் என்பாடு அம்பலாய்விடுமே

என்று நினைத்து உங்களைத் தேடி ஓடிவந்தேன். இந்த இரகசியத்தை நீங்கள் இன்னும் வேறு யாருக்கும் சொல்லிக் கொடுக்கப் போவதில்லையென்றும் என்னிடம் தெரிவித்ததால் அப் பெண் நானே என்பது வெளியாய்விடு மாதலின் உங்களிடம் சமாதானம் செய்து கொள்ள வந்தேன். நேற்று இரவு அது காணுமற் போனதுமே இங்கு வருவது என்று நான் முடிவு செய்து கொண்டேன்' என்று கூறினுள்.

அப்போது டாக்டர் குணசிங்கம், 'அப்படிப்பட்ட சந்தர்ப்பம் நேர்ந்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். அதனுல் நீ இங்கு வரவும் உன்னைக் கண்டு நான் ஆனந்தப்படவும் வழியாயிற்று. ஆனல் இதற்காக நான் என்ன செய்ய வேண்டும்? என்னிடமிருந்து எதையும் பெற உனக்கு உரிமை இருப்பதால் நீ தாராளமாகக் கேட்கலாம்' என்ருர். அதற்கு அம்மாது, 'அந்த திரவத்தைத் திருடியவர்கள் அதை உபயோகித்து ஏதேனும் கொடுமை விளைவித்து அது உங்களிடம் பரிசீலனைக்கு வருமாயின் அதைப்பற்றி ஒன்றும் கூருமல் இருந்துவிட வேண்டும். அதிகமான விசாரணைக்கு இடங் கொடுக்க வேண்டாம். இவ்வாறு செய்வதாக நீங்கள் எனக்கு உறுதிகூற முடியுமா?' என்று கேட்டாள். உடனே டாக்டர், 'நம்பிக்கையுடனும் நிச்சயமாகவும் கூறுகிறேன் கேள். உன் இஷ்டப்படியே நடந்து கொள்வேன். இவ்வளவுதானே நீ என்னிடமிருந்து எதிர்பார்ப்பது? நான் உனக்குச் செய்ய வேண்டியதும் இவ்வளவுதானே' என்று விசாரித்தார். அப்போது அம்மாது தன் ஆசனத்தைவிட்டு எழுந்துகொண்டே, 'ஐயா, இதற்குமேல் நான் கேட்க வேண்டியது ஒன்றுமில்லை. எனக்கு அனுமதி கொடுங்கள். ஆனல் ஒரு விஷயம் எனக்கு ஞாபகம் வந்தது. தற்செயலாக நாம் இருவரும் எப்போதேனும் சந்திக்க நேர்ந்தால் அதற்கு முன் நாம் எப்

போது, ஏன் சந்தித்தோம் என்பதே தெரியாதபடி புதிய மனிதர்கள் சந்திப்பதுபோல் சந்திக்க வேண்டும்' என்று கூறினாள். அப்போது டாக்டர் சிறிது கவலையுடனும் ஆத்திரத்துடனும், 'நான் அப்போதே உன்னிடம் கூறவில்லையா? உனக்குத் தொந்தரை செய்வதைவிட நானே இறந்துவிடவும் சம்மதிப்பேன். நீ இப்போது குறிப்பிட்டுச் சொல்கிற அச் சம்பவத்தை நான் என் மனம் என்னும் சமுத்திர ஆழத்தில் புதைத்துவிட்டேனே. எப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டபோதிலும் அதை வெளியிடவேமாட்டேன். அது உன்னுடைய இரகசியமாயிற்றே. அதை வெளியிட எனக்கு என்ன உரிமை இருக்கிறது' என்றார்.

அப்போது அம்மாது, 'நீங்கள் அதிக தாராள நோக்கமுடைய மனிதர். ஆகவே எனது மனமார்ந்த வந்தனத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நாம் இதற்கு முன் சந்தித்துப் பத்தொன்பது வருஷங்களாய்விட்டன என்றாலும் நான் உங்கள் க்ஷேமத்தில் கவலை செலுத்தவில்லை என்று நினைக்க வேண்டாம். நான் தூரத்தி லிருந்துகொண்டே உங்கள் நிலைமையையெல்லாம் கவனித்து வந்திருக்கிறேன். நீங்கள் உயர்ந்த அந்தஸ்தையடைந்தது கண்டு நான் அளவிலா ஆனந்தமடைந்தேன். அப்போதே நான் பாராட்டுச் செய்தி அனுப்பாதற்கு என் விஷயம் உங்களுக்கு மர்மமாய் இருப்பதுதான் காரணம். இப்போது நான் உங்களை நேரில் பாராட்டுகிறேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட முயன்றபோது டாக்டர் குணசிங்கம் அவளைப் பார்த்து, 'நீ இவ்வாறு திடீரென்று போய் விடக்கூடாது. நான் முன்பு பழைய வீட்டில் சிறு ரசாயன சாலையை வைத்துக் கொண்டிருந்தபோதே அதில் அதிக கவலை வைத்திருந்த நீ இப்போது இந்தப் பெரிய ரசாயன சாலையையும் விசித்திரமான பொருட்காட்சியையும் பார்க்கா

மல் போனால் என் மனம் கஷ்டப்படுமல்லவா? நான் அதற்காக எவ்வளவோ பணம் செலவு செய்து அவைகளை ஏற்படுத்தியிருக்கிறேன்' என்றார். அதற்கு அவள், 'ஆஹா! அப்படியே ஆகட்டும். அதையெல்லாம் கண்டு களிக்க நான் சந்தோஷமுடையவளாகவே இருக்கிறேன்' என்றாள். உடனே அவர், 'அப்படியானால் என் பின்னாலேயே வா' என்று சொல்லிவிட்டு ஒரு கைவிளக்கை யெடுத்துக் கொண்டு புறப்பட்டார். அம்மாதும் அவரது பின்னாலேயே சென்றாள். அந்தப் பொருட்காட்சி எப்படியிருந்திருக்குமென்று நாம் இப்போது சொல்ல வேண்டியதில்லை. அதன் பயங்கரத் தன்மையையும் விகாரத் தன்மையையும்பற்றி முன்னமே விவரித்துள்ளோம். அம்மாது அதையெல்லாம் ஊக்கமாகவும் உற்சாகத்துடனும் போராவலுடனும் கண்ட பின்னர் மேஜை மீதிருந்த திராவகங்களை யெல்லாம் கண்டு ஒவ்வொன்றும் எவ்வாறு செய்யப்பட்டது, அதன் பிரயோசனமென்ன என்பதை யெல்லாம் விசாரித்துக் கொண்டே டாக்டர் மிக்க சிரமமெடுத்து புதிய ஆராய்ச்சிகளைச் செய்ததற்காக அவரை மிகவும் பாராட்டிப் பேசினாள். எந்த ஆணும் பெண்ணும் தன்னைப்பற்றிப் புகழ்ந்தாலும் அதையெல்லாம் லட்சியம் செய்யாமலிருந்த டாக்டர் அம்மாது புகழ்ந்ததைக் கண்டு மட்டும் அதிக சந்தோஷமடைந்தார். இப்பெண்மணி இவ்வாறு ஊக்கங்காட்டிப் பேசுவது அவருக்குச் சந்தோஷத்தை அளித்தது. காரணமென்ன? அம்மாதை அவர் பல வருஷங்களுக்கு முன்பே நேசித்திருந்தார். அவள் ஞாபகமே மனதில் குடிகொண்டிருந்தது. அவளே நேரில் வந்து தன்னைப் புகழ்ந்தால் சந்தோஷப்படாமல் இருப்பாரா? ஆகவே அவரும் பல ரசாயனங்களையும் அவளுக்குக் காண்பித்து அதன் விவரங்களையும் உபயோகங்களையும் விளக்கி வந்தார்.

அவர் காண்பித்த ஒரு திராவகத்தை எடுத்து அம்மாது, 'இதுவும் உங்கள் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டதுதானே' என்று கேட்டாள். அதற்கு அவர், 'ஆம்; நேற்றுதான் இந்த ஆராய்ச்சி முடிந்து இத்தைலம் இறக்கப்பட்டது. உலகத்தில் இதுவரை இல்லாத அவ்வளவு அதிகமான விஷம் பொருந்திய திராவகமாகும். இதில் ஒரு துளி உதட்டில் பட்டாலும் போதும். உயிர் போய்விடும். இந்தத் திராவகத்தின் விசேஷம் என்னவென்றால் இது வெறும் தண்ணீரைப் போலத்தான் இருக்கும்' என்று அவர் சொல்லி முடித்ததும் அம்மாது, 'இவ்வளவு கஷ்டப்பட்டு இம்மாதிரியான ஆபத்தான திராவகங்களைச் செய்வதில் என்ன பிரயோசனம்' என்று கேட்டாள். இதனாலெல்லாம் நான் பலதிறப்பட்ட மருந்துகள் செய்து தீர்க்கமுடியாத வியாதிகளைத் தீர்த்திருக்கிறேன்' என்று கூறிக்கொண்டே கையிலிருந்த சிறு புட்டியை அம் மேஜையின் ஓரத்தில் வைத்துவிட்டு வேறொரு அறைக்கு அவளை அழைத்துச் செல்ல ஒரு புறமாகத் திரும்பியபோது அம்மாதின் ஆடைபட்டு அச் சிறு புட்டி கீழே விழுந்து அதில் இருந்ததெல்லாம் கொட்டிப்போனதுடன் அவளது ஆடையிலும் சிறிதுபட்டது. அப்போது அவள், 'ஆஹா! என்ன அஜாக்கிரதை! என் அஜாக்கிரதையால் உங்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டதோ' என்று விசனப்படுபவள் போல் கூறவும் அவர், 'பாதகமில்லை. இதற்கெல்லாம் வருத்தப்படாதே' என்று சமாதானம் கூறினார். பிறகு அவர் அவளைப் பொருட்காட்சிக்கு அழைத்துச் செல்ல முயன்றபோது அவள் தன் கையிலிருந்த ஏதோ ஒன்றைத் தன் இடுப்பில் சொருகிக் கொண்டாள். அதை டாக்டர் கவனிக்கவில்லை. பிறகு அவர்கள் இருவரும் பொருட் காட்சிக்குச் சென்றதும் அவள் அங்கிருந்த பிரேதங்களையும் அவை பிழைத்திருக்கும்

மனிதர்களைப்போல் வைக்கப்பட்டிருப்பதையும் கண்டு ஆச்சர்யப்பட்டாள்.

அப்போது டாக்டர் அங்கிருந்த மண்டையோடுகள், பிரேதங்கள் முதலியவைகளின் தன்மைகளையும், அவர்கள் உயிருடன் இருந்தபோது செய்த விசித்திர காரியங்களையும் விளக்கி வந்தார். அவைகளைப் பார்க்கும்போது மனோ உறுதியும் தைரியமுமுடைய அம்மாதும் மனங் கலங்கினாள். அவைகளைப் பார்க்க அருவருப்பாக இருந்தது. இவ்வாறு அவள் அவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டே வந்தபோது அங்கு ஒரு கண்ணாடி பீரோவில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு பிரேதத்தைக் கண்டாள். அதற்குக் கண்ணாடிக் கண் வைத்திருந்ததையும், திராவகத்தின் உதவியால் நிமிர்த்தி நிற்க வைக்கப்பட்டிருந்ததையும் கவனித்தபோது அம் மனிதன் உயிருடன் இருப்பதுபோல் தோன்றியதால் தன்னுடைய கணவனின் சகோதரர் மகனான ராஜசேகரனே உயிருடன் தன் எதிரில் வந்து நிற்பதுபோல் அம்மாது நினைத்தாள். டாக்டர் குணசிங்கத்தின் வீட்டுக்குவந்து தன் பெயர் சொர்ணம் என்று சொன்ன அம்மாது கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாகிய ஹேமவதி சீமாட்டியே என்பதை வாசகர்கள் உணர்ந்திருக்கலாம் என்று நம்புகிறோம். அவள் குழந்தை தினகரன் காணாமற் போனபோது அத்திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக ரத்தினபுரிக்கு வந்து வசந்தை என்னும் ஒரு மாதின் வீட்டில் சொர்ணம் என்னும் பெயருடன் சொற்ப காலம் வசித்தா ளல்லவா? அந்த வசந்தை இந்த டாக்டர் குணசிங்கத்தின் தாயார். ராஜசேகரன் பிரேதம் உண்மை மனிதனுடைய தோற்றம்போல் காணப்பட்டதால் ஹேமவதி சிறிது அஞ்சினாள். ஆயினும் அவள் மனோபல முடையவளாதலால் ஒருவாறு சமாளித்துக் கொண்டாள்.

அவள் டாக்டரைப் பார்த்து, 'ஐயா, நீங்கள் பிரேதங்களைப் பத்திரப் படுத்திவைக்கும் முறை மிக்க விசித்திரமானதாய் இருக்கிறது. இதோ மணி பதினொன்று ஆகிவிட்டது. இனி நான் இங்கு இருக்க முடியாது. எனக்கும் தெரியாமலே இரண்டுமணி நேரம் எளிதாய்க் கடந்துவிட்டது. எனக்கு உத்தரவு கொடுத்து அனுப்புங்கள்' என்றாள். அப்போது டாக்டர், 'நீ மறுபடியும் எப்போதாவது இங்கு வந்து உன்னை நான் காணும்படியான பாக்கியத்தை அளிப்பாய் என்று நம்புகிறேன். ஆனால் நீயாக இஷ்டப்படும்போது இங்குவா' என்றார். அதற்கு அவள், 'ஐயா, அப்படியே ஆகட்டும். நான் மீண்டும் இங்கு வருகிறேன். இதற்கிடையில் நீர் கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட வேண்டாம்' என்றாள். அப்போது அவர், 'உன் சம்பந்தமான எதையும் நான் மறக்கமாட்டேன். மறக்கவும் என்னால் முடியாது. அதுமட்டுமா? உனக்காகச் செய்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமலும் இருக்க முடியாது' என்று தெரிவித்தார்.

பிறகு டாக்டர் குணசிங்கம் ஹேமவதி சீமாட்டியை மாளிகைக்கு வெளியே கொண்டுபோய் விட்டு மாளிகையின் கதவை உட்புறம் சாத்திக்கொண்டார். சொற்ப நேரம் அவளது ஞாபகமாகவே அவர் இருந்தார். அவளது கை தன் கையில் இருப்பது போலவும் அதை அவர் மனமார அழுத்துவது போலவும் நினைத்தார். அவள் பேசிய இனிமையான சத்தம் இன்னும் அவரது காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. அம்மாது யார்? அவளது அந்தஸ்து என்ன என்பது அவருக்குத் தெரியாமல் இருந்தும் அவர் அவளிடம் கொண்ட காதல் அபூர்வமானது. வெறும் உற்சாகத்தாலோ, காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தாலோ ஏற்பட்ட காதல் அல்ல. அவரது மனம் அம்மாதின்

காதல் என்னும் விக்கிரகத்தின் முன் பணிந்துவிட்டது. இதனால் உண்மைக் காதலின் சக்தி எவ்வளவு என்பது நன்கு தெரிகிறதல்லவா? அவர் பல வருஷங்களுக்கு முன் அவளைச் சந்தித்துக் காதல் கொண்டார். பிறகு வேறு யாரையுமே விவாகம் செய்துகொள்ளாமல் பிரமசாரியாகக் காலங்கழித்து தத்துவம் சயன்ஸ் முதலிய ஆராய்ச்சிகளில் புத்தியைச் செலுத்திப் பெண்ணாசை என்பதையே மறந்துவிட்டார். அப்படிப்பட்டவரும் அந்தப் பழைய காதலியைக் கண்டதும் தன் வைராக்கியத்தையும் மறந்து அன்பொழுகப் பேசினர். அவளுடன் பேசியதையே இன்பமாகக் கொண்டார். ஆ! என்ன காதலின் சக்தி! உண்மையில் ஒரு மாதை ஒரு ஆடவன் காதலிப்பானுயின், அவர்களுக்குள் சம்பந்தம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இல்லாமற் போயினும் அதற்காக அவன் வெறுப்படைந்து விடாமல் அவனால் இயன்றவரை அம்மாதுக்கு உதவி செய்து ஆயுள் முழுதும் அவளை மறவாமல் இருப்பான். பின்னரும் அடிக்கடி சந்தித்து அன்பைத் தெரிவித்துக் கொள்ளும்படியான சந்தர்ப்பங்களை ஆண்டவன் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பான் என்பதும் நிச்சயம்.

———:o:———

## 33-வது அத்தியாயம்

### மறைவிலிருந்து கேட்டல்

இவ்வாறு ஹேமவதி சீமாட்டி டாக்டர் குணசிங்கம் மாளிகைக்குச் சென்ற இராவிற்கு அடுத்த நாள் பகல் சுமார் இரண்டு மணிக்கு மோகனதாஸ் கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியின் மாளிகைக்கு வந்து வாயிற் கதவைத் தட்டினன். அப்போது அங்கிருந்த சேவகன் கதவைத்

திறந்து என்னவென்று விசாரித்தபோது, அவன் 'ஹேமவதி சீமாட்டி மாளிகையில் இருக்கிறாரா?' என்று கேட்டான். அப்போது அவன் முகம் வெளுத்திருந்தது. ஏதோ கவலையுடையவன்போலக் காணப்பட்டான். ஆயினும் அவன் ஏதோ ஒருவிதமான உறுதியுடன் வந்தவனைப்போல் அவனது முகத் தோற்றத்திலிருந்து தெரிந்தது. அந்த சேவகன் மோகனதாஸினிடம், 'ஐயா! சீமாட்டியார் வீட்டில்தான் இருக்கிறார். ஆனால் உங்களை எக்காரணத்தைக் கொண்டும் மாளிகையில் விடக்கூடாதெனக் கட்டளையிட்டிருக்கிறார். அது கண்டிப்பான உத்தரவு' என்று தெரிவித்தான். அதற்கு மோகனதாஸ், 'என்னைப்போன்ற நற்குணமுடையவர்கள் சாதாரண காலங்களில் அத்தகைய எதிரான உத்தரவைப் பெரிதும் மதிப்போம். ஆனால் சிற்சில அவசர சந்தர்ப்பங்களில் இதை அலட்சியம் செய்து எப்படியாவது உள்ளே போகவேண்டும் என்று கேட்கத்தான் வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் இப்போது எனக்கும் ஏற்பட்டிருக்கிறது' என்று தெரிவித்தான். அப்போது அந்த சேவகன் மோகனதாஸ் உள்ளே போய்விடாதபடி வாயிலின் நடுவில் நின்றுகொண்டு, 'அதற்கு நான் என்ன செய்வேன்? என்னால் உன்னை உள்ளே அனுமதிக்க முடியாது' என்று சொல்லிவிட்டான். அதைக் கண்ட மோகனதாஸ் சிறிது ஆத்திரத்துடனும் கோபத்துடனும், 'என்னை இவ்வாறு அவமானப்படுத்தாதே. நான் பலாத்காரமாக உள்ளே நுழைந்துவிடமாட்டேன். ஆதலின் நீ இப்படி வாயில் நடுவே நிற்க வேண்டியதில்லை. நீ தயவு செய்து ஒரு ஆளைச் சீமாட்டியினிடம் அனுப்பி நான் அவளைக் காண விரும்புவதாகவும், அது தயா விஷயமாய்க் கேட்கவில்லையென்றும், உரிமையுடனேயே கேட்பதாகவும் தெரிவி. அதற்கு என்ன பதில் வருகிறதென்று பார்ப்போம்' என்றான்.

உடனே சேவகன் இனி தான் வாயில் நடுவே நிற்க வேண்டியதில்லை யென்பதை உணர்ந்து ஒரு பக்கமாக நின்று ஒரு சேவகனிடம் மோகனதாஸ் சொன்ன செய்தியை அறிவிக்கும்படி ஹேமவதி சீமாட்டியிடம் அனுப்பினான். அவன் சொற்ப நேரத்துக்குள் திரும்பி வந்து, ஐயா! நீ இங்கு நிற்கவும் கூடாது. இங்கிருந்து ஓடிப்போக வேண்டியதுதான். அதுதான் என் எஜமானியின் கட்டளை' என்று கூறிக் கொண்டே டடாலென்று கதவைச் சாத்திவிட்டான். இந்த விஷயம் இவ்வாறு நடந்து கொண்டிருந்தபோது ஹேமவதியின் குமாரிகளில் மூத்தவளான ராஜேஸ்வரி, எதிரில் ஒரு அறையில் ஏதோ வேலையாக இருந்தவள் இதையெல்லாம் கவனித்தாள். ஹேமவதி சீமாட்டி மோகனதாஸ்மீது பழி சுமத்தியதில் ராஜேஸ்வரிக்கு சந்தேகம்தான் என்று வாசகர்கள் முன்னரே அறிவர், இப்போது அவன் வந்த தோரணையும், அவனை ஹேமவதி துரத்தியதையும் கண்ட அவளுக்குப் பழைய சந்தேகம் அதிகரித்துவிட்டது. மோகனதாஸ் குற்றமற்றவனென்றும், இதில் ஏதோ விசேஷமிருக்கிறதென்றும், அவமானப்பட்டுத் திரும்பிச் சென்ற மோகனதாஸ் சும்மா இராமல் இதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்வானென்றும் நினைத்து இன்னும் நடக்கப்போவதைக் கவனிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அதையே ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். மேலும் அவள் தான் கண்ட சங்கதியை யெல்லாம் தனது சகோதரி கற்பகத்தினிடமும் கூறவே அவளுக்கும் உண்மை தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் ஏற்பட்டதால் இருவருமாகச் சேர்ந்து என்ன நடக்கப் போகிறதென்பதைக் கவனித்து வந்தனர்.

மோகனதாஸ் இவ்வாறு திரும்பிய ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் அம்மாளிகையின் முன் வாயிலின் கதவு

பலமாக இடிக்கப்பட்டது. வழக்கப்படி அந்தச் சேவகன் கதவைத் திறந்ததும் குள்ளமாகவும் ஸ்தூல சரீரத்துடனும், உபாய உடைகளுடனும் இருந்த ஒரு மனிதர் அவனைக் கேட்காமலும் ஹாலில் நுழைந்துவிட்டார். அவர் உள்ளே நுழைந்ததும் கோட்டையைப் பிடித்துவிட்டவர்போல் சந்தோஷமடைந்து மிக்க அதிகார தோரணையில் அங்கிருந்த ஆளிடம் 'உங்கள் எஜமானி இருக்கும் அறைக்குச் செல்வதற்காக மாடிமீது செல்ல எனக்கு வழிகாட்டு' என்று கூறினர். அவர் உள்ளே வரலாமா என்று கேட்காமலும் உள்ளே புகுந்துவிட்டபடியாலும், சீமாட்டிக்கு அதிகம் தெரிந்தவரே போல் மாடிமீது செல்ல வழிகாட்டு என்று சொன்னதாலும் சேவகன் ஒன்றும் பேசாமல் அவர் இஷ்டப்படியே மாடி மீது அழைத்துச் சென்ருன்.

மாடிமீது ஏறியதும் சீமாட்டியிடம் யார் வந்திருப்பதாகச் சொல்வது என்று சேவகன் விசாரிக்க, வந்தவர் 'செல்வநாதர்' என்று விடை கூறினர். பிறகு சேவகன் ஹேமவதி சீமாட்டி உட்கார்ந்திருந்த அறைக்குள் செல்லும்படி கூறினன். இப்போது நாம் ஒரு விஷயத்தை இங்கே சொல்ல வேண்டும். ஹேமவதியின் குமாரிகளான ராஜேஸ்வரியும் கற்பகமும் மோகனதாஸ் சம்பந்தமாய் என்ன நடக்கிறதென்பதை அறிய மிக்க ஆவலுள்ளவர்களாய் இருந்ததால் அந்த செல்வநாதர் என்னும் மனிதர் வந்ததையும், அவர் உள்ளே நுழைந்த தோரணையையும் அவர்கள் பார்த்தார்கள். அப்போது ராஜேஸ்வரி தன் சகோதரியிடம், 'ஆ! நமது சகோதரன் தினகரம் பிரபு இதற்கு முன்னரே நம்மிடம் செல்வநாதர் என்பவரைப்பற்றிப் பரிகாசமாகக் கூறியிருக்கிறு னல்லவா? அவர்தான் இவர். விசித்திரமான உடைகளை அணிந்துகொண்டு வேடிக்கை மனிதராகத் தோன்றுகிருரே தெரிய

வில்லையா?' என்றாள். அதற்குக் கற்பகம், ஆம்; நீ சொல்வது வாஸ்தவம்தான். ஆனால் அவருக்கு நமது அம்மாவினிடம் என்ன வேலை இருக்கிறது' என்று கேட்டாள். அப்போது ராஜேஸ்வரி, 'நாம் எதையும் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருப்போம். மோகனதாஸ் சம்பந்தமாகத்தான் இவரும் இங்குவந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்' என்றாள். ஆகவே அவர்களிருவரும் யாருக்கும் தெரியாமல் மாடியின் மீது ஏறி ஹேமவதி சீமாட்டியும், செல்வநாதரும் சந்தித்த அறையின் பக்கத்து அறையில் நுழைந்து சுவர் ஓரமாக நின்று தாயாரின் அறையில் நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

செல்வநாதர் யார் என்பதுபற்றி ஹேமவதி சீமாட்டி ஒருவாறு தன் குமாரன் மூலம் தெரிந்து கொண்டிருந்தபடியால அவர் ஒரு வேடிக்கை மனிதராகவே இருக்கவேண்டுமென்று நினைத்ததற்கேற்ப அவரது தோற்றமும் அவ்வாறே இருந்ததைக் கண்டாள். அவர் மோகனதாஸின் வேலையாக வந்திருப்பாரென்று அவள் நினைக்கவேயில்லை. எவ்வாறாயினும் அவர் வேலையாளின் அனுமதி பெறுமலும் திடீரென்று உள்ளே பிரவேசித்த தோரணை அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவள் அவரை அலட்சியமாகவே வரவேற்றாள். ஆயினும் செல்வநாதர் இதற்கெல்லாம் கவலைப்படுபவரல்ல. அவருக்குக் காரியம் பெரிதே யொழிய வீண் ஆடம்பரங்களில் கருத்தில்லை. ஆதலால் அவள் சொல்லாமலேயே அவராக அங்கிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார். பிறகு அவர், 'நான் முறைப்படி அனுமதி முதலியவைகளைப் பெறுமல் உன்னைக் காணும் பொருட்டு உள்ளே நுழைந்ததுபற்றி நீ ஆச்சரியப்படுகிறாய் போலும்!' என்று கேட்டார். அதற்கு அவள் அலட்சியமாகப் பேசுபவள்போல், 'ஐயா! உமக்கு எனது

குமாரன் சிறிது அறிமுகமானவனாய் இருக்கிறபடியால் அவனைக் காண வந்திருக்கிறீர் என்று நினைக்கிறேன். அவன் இப்போது வீட்டில் இல்லை' என்று தெரிவித்தாள். அப்போது செல்வநாதர், 'அம்மணி! உமது குமாரன் எனக்குச் சிறிது அறிமுகமானவன் என்பதற்காகவே நான் அவனுடைய தாயாரின் அந்தரங்க அறைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்பதை உணர்ந்திருக்கிறேன். ஆனால் இப்போது நான் உன்னிடமே ஒரு வேலையாக வந்திருக்கிறேன். மோகனதாஸ் என்னும் வாலிபனிடம் எனக்கு அபிமானம் அதிகமிருப்பதால் அவன் சார்பாக இவ்விடம் வந்திருக்கிறேன்' என்று தெரிவித்தார்.

திடீரென்று எதிர்பாராத வகையில் மோகனதாஸின் பெயர் அவளது காதில் விழுந்ததும் அவள் திக்பிரமையுடன் மனக்குழப்பம் அடைந்தவள்போல் முதலில் காணப்பட்டாள். ஆயினும் அவள் எப்போதுமே எதையும் சமாளித்துக் கொள்ளும் மனோபலமுடையவளாதலால் அவள் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, 'ஐயா, உம்முடைய வயதை உத்தேசித்து நீங்கள் சொல்வதை நிதானமாகக் கேட்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் யாருக்காகவும் நான் அந்த வாலிபனை மன்னிக்க முடியாது' என்று உறுதியுடன் பேசினாள். அப்போது செல்வநாதர் சிறிது கோபமடைந்தவர்போல், 'அம்மணி! அவ்வாலிபன் உன்னிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்க்கவில்லை. நியாயத்தையே எதிர்பார்க்கிறான். குற்றம் செய்தவர்களன்றோ மன்னிப்பை எதிர்பார்க்க வேண்டும். குற்றம் இழைக்கப்பட்டவர் நியாயத்தைத்தானே எதிர்பார்ப்பார்' என்று கூறியதும் ஹேமவதி சீமாட்டி உறுதியான உண்மையைப் பேசுபவள்போல், 'மோகனதாஸ் என்னிடம் நடந்து கொண்ட விதத்தை மாறுபடுத்தித் திரித்து உம்மிடம் கூறி

யிருக்கிறுன் என்றே உம்முடைய வார்த்தைகளிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது' என்று கூறவே செல்வகாதர், 'இல்லே, இல்லே. அவன் ஒருகாலும் பொய் பேசமாட்டான். நீதான் அவனிடம் கேவலமாக நடந்து கொண்டிருக்கிறுய்' என்று சொன்னதும் ஹேமவதி சீமாட்டிக்குக் கோபம் அதிகரித்துவிட்டது. கண்களில் கோபத்தணல் வீசிற்று- அவளது கன்னங்கள் சிவந்தன. உடனே அவள், 'நான் பொய் பேசுபவள் என்று நீர் எப்படி என்மீது அபாண்டம் சுமத்த முடியும்? உமக்கு அவ்வளவு தைரியமா?' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

அப்போது செல்வநாதர், 'அம்மணி! எப்போதுமே ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்துவதென்றுல் அது எளிய காரியமன்று. அதிலும் குற்றம் சுமத்துபவர் ஆடவராயும், சுமத்தப்படுபவர் பெண்ணுயும் இருந்துவிட்டால் அதை ருஜுப்பிப்பது இன்னும் கஷ்டமாய்விடுகிறது. இப்போதும் அதேமாதிரி சம்பவம் ஏற்பட்டிருக்கிறது' ஒன்று தெரிவித்தார். அச்சமயம் ஹேமவதி தன் ஆசனத்தினின்றும் எழுந்து நின்று, 'செல்வநாதரே! நாம் பேசியது போதும். இனிமேல் வெளியே போக வேண்டியதுதான்' என்று கூறிஞள். அதற்கு அந்த வயோதிகர், 'மாதே! நான் இம்மாதிரி மிரட்டல்களுக் கெல்லாம் அஞ்சுபவனல்ல. மேலும் உயர்ந்த அந்தஸ்திலுள்ள குடும்பத்தார்களேப்பற்றி எனக்கு நல்லெண்ணம் கிடையாது. மலே குன்று முதலியவைகளும் தூரத்திலிருந்து பார்க்கும்போது அலங்காரமாகத்தான் தோன்றுகிறது. ஆனுல் கிட்ட நெருங்கிப் பார்த்தால் அதன் வண்டவாளம் தெரிகிறது. அதுபோலவே இரத்தினபுரியிலுள்ள பிரபுக்கள் குலத்தின் வண்டவாளமும் இருக்கிறது. ஆகவே நான் அவர்களே மதிப்பதுமில்லே; அவர்கள் என்னே அலட்

சியம் செய்வதை லட்சியம் செய்வது மில்லை' சிமாட்டி தன் சோபாவில் உட்கார்ந்து கொண்டே, 'ஐயா, செல்வசா தரே! இப்போது நீர் என்னைத் தூஷிக்கவே இங்கு வந்திருந் தாலும் அதை நான் பொறுமையுடன் கேட்க வேண்டியதா கத்தான் இருக்கிறது. ஏனெனின் உம்மைப் போன்ற வய தான, கௌரவம் பொருந்திய ஒருவரை என் ஆட்களைக் கொண்டு வெளியே அனுப்ப நான் விரும்பவில்லை' என்றாள்.

அப்போது அவர், 'உன்னுடைய சேவகனின் கையும் என்மீது படாதபடி பார்த்துக்கொள்ளக் கூடிய புத்தி உனக்கு இருக்குமென்றே நினைக்கிறேன்' என்று கூறிவிட்டு அவர் அவளது முகத்தையே சொற்ப நேரம் உற்று நோக்கி னார். அவள் மனச்சாட்சி அவளைத் துன்புறுத்துகிறது என் பதை அவளது முகத் தோற்றத்தால் அறிந்து கொண்டார். மேலும் அவர் கூறியதாவது:—'நான் உனக்கு ஒரு சம்பவம் சொல்கிறேன் கேள். அதன் நோக்கத்தைப் பிறகு விளக்கு கிறேன். அதாவது:—நல்ல அந்தஸ்திலுள்ள ஒரு விதவை இருந்தாள். அவள் ஒழுக்கத்தில் சிறந்தவளென்றே உலகத் தார் மதிக்கும்படி நடந்து கொள்வதில் மிக சாமர்த்திய முடையவள். இப்போது சமூகத்தில் ஏற்பட்டிருக்கிற உயர்வு தாழ்வின்படி பார்த்தால் அவளைவிட மிகக் குறைந்த அந்தஸ்திலுள்ள ஒரு வாலிபனிடம் அவள் ஆசை கொண் டாள். ஆனால் அவனை விவாகம் செய்துகொண்டால் உலகம் என்ன நினைக்குமோ என்று அஞ்சி அவனது இரகசியக் காதலியாக இருக்க விரும்பினாள் அவள் உயர்ந்த அந்தஸ்தி லிருந்தபடியால் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்ததும் அந்த இளைஞன் அதற்குச் சம்மதித்துவிடுவான் என்று நிச் சயமாக நம்பினாள். இவ்வாறு நடந்து கொள்வது தன் அந் தஸ்துக்குக் கேவலம் என்பதையும் அவள்தன் மோகத்தில்

மறந்துவிட்டாள். அந்த மாதுக்குத் தக்க பருவம் வாய்ந்த இரண்டு குமாரிகள் இருந்தனர். அவர்களுக்குத் தக்க காதலர்களைத் தேடவேண்டிய அவள் வெட்கமில்லாமல் அந்த இளைஞன் அழகைக் கண்டு மோகித்து அவனிடம் காதல் கொண்டாள். ஆனால் அந்த இளைஞன் மனதில் இதற்காக அவளை வெறுத்தானென்றாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் பெருந்தன்மையுடன் மறுத்துவிட்டான். அது மட்டுமா? அவன் விசால நோக்கமுடையவனாதலால் அவள் செய்கையை எங்கும் சொல்லாமல் மறைப்பதாகவும் வாக்குறுதி யளித்தான். ஆனால் அம்மாதோ அவனிடம் பகைமை கொண்டு பழிவாங்கக் கருதி அவன்மீது அபாண்டங்களைச் சுமத்தினாள். இப்போதும் அவள் தான் செய்த குற்றத்துக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டால் உண்மையில் நடந்த விஷயத்தைச் சொல்லாமலேயே இருந்துவிடுவதென்று அந்த இளைஞன் தீர்மானம் செய்திருக்கிறான்.

என்று இவ்வாறு கூறியதும் அவர் பேசுவதை நிறுத்திவிட்டு ஹேமவதி சீமாட்டியின் முகத்தை உற்றுக் கவனித்தார். அவள் எவ்வளவுதான் மன உறுதியுடையவளாயினும் எவ்வளவுதான் தைரியத்துடன் உண்மையை மறைத்துப் பேசியபோதிலும் அவர் பேசிக்கொண்டே வந்தபோது அவளது முகத்தில் பலவித குறிகள் தோன்றியதைக் கண்டார். குற்றமுள்ள நெஞ்சு சும்மா இருக்குமா? சொற்ப நேரத்துக்குப் பின்னர் ஹேமவதி சீமாட்டி செல்வநாதரைப் பார்த்து, 'ஐயா நீர் சொல்லும் கதையின் உண்மைப் போக்கை நான் தெரிந்து கொள்ளவில்லை யென்றால் நான் சிறு குழந்தையினும் கேடாகத்தான் இருக்க வேண்டும். நீர் என்னைப்பற்றி இவ்வாறெல்லாம் கூறத் துணிவதாயின், இக் கதையை எனக்கும் மோகனதாஸுக்கும் நடந்ததை ஒப்பிடுவதாயின்

உம்மை ஒரு பொய்யர் என்றே கருதுவதுடன் உடனே இங்கிருந்து வெளியே அனுப்பிவிடவும் நேரிடும்,' என்று கண்டிப்பாகக் கூறினாள். அப்போது செல்வநாதர், 'அம்மணீ! நீ சொன்னபடியே நடக்கட்டும். ஆனால் இப்போதுள்ள நிலைமையில் எத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமென்பதை நீ அறியமாட்டாய். சீமாட்டியே! நான் ஒரு பெரிய பணக்காரன். நீ வேண்டுமென்றே கேவலப்படுத்திய மோகனதாஸ் தன் நியாயத்தைப் பெறுவதற்காக நான் எவ்வளவு வேண்டுமாயினும் செலவழிப்பேன். நீ உன் அந்தஸ்தையும், கௌரவத்தையும் வேண்டுமாயின் செல்வத்தையும் கொண்டு அந்த இளைஞனை உன் காலின்கீழ்த் தேய்த்துவிடலாமென்று நினைத்தாய் போலும். ஆனால் அது முடியாத காரியம் என்பது ஞாபகத்திலிருக்கட்டும். அவனுக்கும் ஆதரவு அளிக்கக்கூடிய சிநேகிதர் இல்லாமற் போகவில்லை. அதிலும் நான் அவனுக்குத் துணை இருக்கும்வரை எத்தகைய கவலையும் அவனுக்கில்லை. அவன்மீது நீ அபாண்டம் சுமத்தி மானக்கேட்டை உண்டாக்கியதால் உன்மீது மானநஷ்ட தாவா தொடரப்படும் என்பது ஞாபகத்தில் வைத்துக்கொள்,' என்று எச்சரிக்கை செய்தபோது ஹேமவதி சீமாட்டி தனது ஆசனத்தினின்றும் எழுந்து இனி அவரை வெளியே அனுப்புவது தவிர வேறு வழியில்லை என்பதை அறிந்து எப்படிப்பட்ட எதிர்ப்புகள் தோன்றியபோதிலும் எல்லாவற்றையும் எதிர்த்துப் போராடுவதென்னும் உறுதியுடன், 'போதும், ஐயா! போதும். நான் கேட்கவேண்டியதெல்லாம் கேட்டு ஆயிற்று. உமது பேச்சை நிறுத்தும்' என்றாள்.

அப்போது அவளுடைய உறுதியைச் சிறிது லட்சியம் செய்யாதவர் போலும், அவள்மீது தனக்கு ஆத்திரமிருப்

பது போலவும் ஆத்திரத்துடன் 'இன்னும் ஒரு வார்த்தை. உனக்கு இரு குமாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் சிறு குழந்தைகள் அல்ல. கலியாணம் முடிந்திருந்தால் அவர்களே குழந்தையைப் பெற்றிருப்பார்கள். அவர்களுக்குத் தக்க வரனைத் தேடவேண்டிய நிலைமையில் நீ இருக்கிறாய். இப்போது உன் வண்டவாளம் வெளியே தெரிந்தால் உன் குமாரிகளுக்கும் கெட்ட பெயர் வரும். இப்போது இந்த வழக்கு தொடரப்படும்படி நீ விட்டுவிடுவாயாயின் அதனால் உனக்கே கஷ்டம்வரும். கோர்ட்டார் மோகனதாஸின் சொற்களைத் தான் நம்புவார்கள். நீ வேண்டுமென்றே அவன்மீது அபாண்டம் சுமத்தியதாகத் தீர்ப்பு வெளியாய்விடுமாயின் உன்னைப் பற்றி ஜனங்கள் கேவலமாக நினைத்துவிடுவார்கள். பிறகு உன் குமாரிகளின் கதி என்ன! உன்னைப் போன்ற ஒரு தாய் பெற்ற பெண்களைக் கலியாணம் செய்துகொள்ளத் தக்க அந்தஸ்திலுள்ளவர்கள் யாரேனும் முன் வருவார்களா? உன் குமாரன் இப்போதே உனக்கு அடங்கி நடக்காமல் இருக்கிறானே. நீ மோகனதாஸிடம் ஆசைகொண்டு கேவலமாக நடந்து கொண்டாய் என்று தெரிந்தால் அவன்தான் உன்னை இந்தச் சொற்ப அளவாவது மதிப்பானா? இந்த விஷயத்தை நெருக்கடியான நிலைமைக்குக் கொண்டுவருமுன் நன்றாக யோசித்துப் பார். இப்போது நீ அவனைப்பற்றி யாரிடமும் கேவலமாகச் சொல்லியிருக்கிறாயோ அங்கெல்லாம் போய் அது பொய்க்கதை என்று தெரிவித்துவிட்டால் உன் வேலை தீர்ந்துவிடும். அதைவிடுத்துக் கோர்ட்டுக்குப் போவதென்று வைத்துக் கொண்டால் பல விஷயங்களெல்லாம் விசாரணையில் வெளியாவதுடன் உலகமெல்லாம் சிரிக்கும். ஆகவே, சீமாட்டியே! நன்றாக யோசித்து உன் முடிவைச் சொல்' என்று கேட்டார்.

முன் யோசனை செய்தபடியே எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் விட்டுக் கொடாமல் போராடுவதென்னும் தீர்மானத்தின்படி ஹேமவதி சீமாட்டி, 'நான் இதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது. இதுவரையில் உட்கார்ந்துகொண்டு கேட்டதற்கும் உம்முடைய வயதே காரணம்' என்றாள். அப்போது செல்வநாதர் அவளது உள்ளக் கருத்தை அப்படியே உணர்ந்தவர்போல், 'இல்லவே இல்லை. நீ இதுவரையும் நான் சொன்னவைகளைக் கேட்டதற்குக் காரணம் என்னிடத்திலிருக்கும் மரியாதையல்ல. உன் அச்சம்தான் இவ்வாறு கேட்கும்படி செய்தது. ஆனால் அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா?' என்றார். அச்சமயத்தில் அவர்கள் இருந்த அறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டு தினகரம் பிரபு உள்ளே நுழைந்தான். அவன் அப்போது தான் உயர்ந்த நிலைமையில் இருப்பதன் காரணமாய் உன்மத்தனாய் இருந்தான். செல்வநாதரைக் கண்டதும் தினகரம் பிரபு பரிகாசமாக ஒருமுறை சிரித்துவிட்டு, 'மூலக்கொத்தளத்தைச் சேர்ந்த எனது நண்பரே! நீங்கள் அந்த அசுத்தமான பிரதேசத்தினின்றும் இங்கு என்ன வேலையாக வந்தீர்? எங்களுடைய மாளிகைபோன்ற நாகரிக இடங்களில் சொற்ப நேரமேனும் இருக்க உம்மால் முடியுமோ?' என்று அலட்சியமாகக் கேட்டான். அவன் அவ்வாறு மரியாதையின்றிப் பேசிய போது செல்வநாதர் மிக வெறுப்புடனும் ஆத்திரத்துடனும் அவனது முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். மேலும் அவர் தான் எவ்விதத்திலும் ஹேமவதி சீமாட்டி, தினகரம் பிரபு ஆகிய இருவரையும்விடத் தாழ்ந்தவரல்ல என்னும் மனோபாவத்துடன் தன்னை உயர்வாக மதித்துக்கொண்டு அவர்களிருவரையும் கேவலமாகவும் அலட்சியமாகவும் பார்த்தார். அதைத் தாயும் மகனும் அறிந்துகொண்டார்கள்.

அவர் வாயினால் திட்டாமல் அவரது பார்வையாலேயே திட்டியதைத் தினகரன் அறிந்தானென்றாலும் அதனாலேயே தன் குற்றத்தை அறிந்து திருத்திக்கொள்ளும் அறிவு அவனுக்கு இருக்கவில்லை. ஆகவே அவன் மறுபடி பரிகாசமாக, 'அடே கிழப்பையலே! அன்று சந்திரசேகரம் பிரபு உனக்கு விருந்தளித்தபோது நீ அங்குவந்த சமயம் வண்டிக்காரனை உதைத்தபோது பார்த்தமாதிரி இப்போதும் பார்க்கிறாயே' என்று கேட்டான்.

அப்போது செல்வநாதர் சீமாட்டியைப்பார்த்து, 'அம்மணி! இப்படிப்பட்ட தரிதலையான ஒரு குமாரனை நீ பெற்றிருப்பதுபற்றி உண்மையிலேயே உன்னிடம் அனுதாபங் கொள்கிறேன்' என்று கூறினார். அதைக் கேட்டதும் அதிக கோபமடைந்த தினகரம்பிரபு, 'அடே அயோக்கியக் கிழவா! என்னைத் தூஷிக்கிறாயா? என்று கூறிக்கொண்டே அவர்மீது தனது முஷ்டியால் குத்தப் போனான். ஆனால் செல்வநாதர் தன் கையிலிருந்த வெள்ளிப்பூண் போட்ட தடியால் அதை எதிர்த்ததும் அந்தப் பயங்காளி பயந்து பின் வாங்கினான். கிழவருடைய தைரியத்தின் முன் வாலிபனின் வீரம் ஒடி மறைந்தது. மேலும் அவர், 'தினகரம்! உன் விரல் என்மீது படுமாயின் அதற்கேற்ப தண்டனையை நீ அடையாமல் போக மாட்டாய். ஞாபக மிருக்கட்டும்' என்று கூறிக்கொண்டே அவ்வறையின் கதவின் அருகில் சென்றார். இதற்குள் ஹேமவதி சீமாட்டியும் மணி யடிக்கவே சேவகர்கள் வந்து நிற்கவும் சீமாட்டி அவர்களைக்கண்டு, 'இதோ இந்த மனிதனை வெளியே கொண்டுபோய் விட்டுவிடுங்கள். இனி இவரை எக்காரணத்தைக் கொண்டும் உள்ளே விடாதீர்கள்' என்று கட்டளை யிட்டாள். அப்போது தினகரம் பிரபுவும், 'ஆம்; அவனுக்கு உதை கொடுத்து அனுப்ப வேண்

டியதுதான்' என்று கத்தினனே யொழிய அவரது அருகில் செல்லவும் அவனுக்குப் பயம். அவரும் மிக நிதானமாகப் படிக்கட்டுகளின வழியே இறங்கி அம்மாளிகையை விட்டு வெளியே சென்றார்.

செல்வநாதர் போனபிறகு தினகரன் தன் தாயினுடன் ஏதாவது பரிகாசம் செய்து அவளை வலிய சண்டைக்கு இழுக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் மீண்டும் ஹேமவதி சீமாட்டி இருந்த அறைக்குள் சென்று, 'அந்தக் கிழப்பையல் எதற்காக இங்கு வந்தான்' என்று தன் தாயா ரைக் கேட்டான். ஹேமவதியும் தன் குமாரனுடன் சண்டை யிட வேண்டுமென்று நினைத்திருந்ததால், 'அவர் எதற்கு வந்தாலென்ன? என்னுடன் பேச வந்த ஒருவரை நீ இவ் வளவு கேவலமாக நடத்தி அவருடன் சண்டையும் போட்டு வீட்டில் அனைவரும் சிரிக்கும்படி செய்தாயே, உனக்கென்ன தைரியம்?' என்று கேட்டாள். கோபித்துக் கொண்டதா லேயே மிகவும் அயர்ச்சியடைந்து விட்டவன்போல் சோபா வில் சாய்ந்துகொண்டு, 'வாஸ்தவத்திலேயே நான் அவனை அவமரியாதையாக நடத்தினேன், நீயும் ஏன் அந்த சமயத் தில் மணியடித்து சேவகர்களை வரவழைத்து அவனை வெளியே கொண்டுபோய் விடும்படி சொன்னாய். அதிருக் கட்டும். நகரில் எங்கு பார்த்தாலும் பெரிய புகார் கிளம்பி யிருக்கிறதே, அது என்ன சங்கதி? மோகனதாஸ் என்னும் இளைஞன் உன்னிடம் காதல் கொண்டானும்! ஆகவே இப் படிப்பட்ட அற்பர்களை யெல்லாம் இங்கே ஏன் சேர்க்க வேண்டும்! எனக்கு எப்போதுமே செல்வநாதரைக் கண் டால் வெறுப்புதான். அவனை நான் உதைக்காமல் போனேனே என்றுகூட நினைக்கிறேன்' என்று சொன்னான்.

அப்போது அவன் ஏதோ பெரிய வீரனைப்போல் பேசி னனே யொழிய அவன் பயங்காளி என்பதை ஹேமவதி

அறிவாளாதலால் அவனை வெறுப்புடன் நோக்கினுள். அவள் செல்வநாதர் வந்துபோனது பற்றியும் மற்றும் பல விஷயங்களைப்பற்றியும் தனியாகச் சிந்திக்க விரும்பியதால் உடனே அவள் அவ்வறையை விட்டுத் தன் படுக்கை யறைக்குச் சென்றுள். இதற்கிடையில் ராஜேஸ்வரியும் கற்பகமும் அடுத்த அறையில் இருந்துகொண்டு நடந்ததை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆரம்பம் முதலே மோகனதாஸ் சம்பந்தமாய்த தன் தாய் சொன்ன கதையை ராஜேஸ்வரி நம்பவில்லை. செல்வநாதர் வந்து போனபிறகு அவளது சந்தேகம் நிச்சயமாக மாறிவிட்டது. கற்பகமும் அதே முடிவுக்கு வரவேண்டியதாயிற் றென்றுலும் சிறிது யோசனையுடனேயே தன் சகோதரியின் பேச்சை நம்பினுள். தன் தாயின்மீது எப்படிச் சந்தேகிப்பது என்று கற்பகம் நினைத்தாள். ஆனல் ராஜேஸ்வரிக்கு அந்த எண்ணமே இல்லை. ஹேமவதி சிமாட்டி இவ்வாறு செய்ததால் அது அவளுடைய குமாரிகளுக்குத் தீமையாய் முடியும் என்று சொன்னதைக் குமாரிகள் கேட்டுக் கொண்டிருந்தபடியால் அவர்கள் வருத்தப்பட்டார்கள். ஹேமவதி சமூகத்துக்கு அஞ்சி மோகனதாஸை மணந்துகொள்ள முடியாமல் அவனது இரகசியக் காதலியாக இருக்க முடிவு செய்து அவனை வேண்டினுள் என்று குமாரிகளிருவரும் நிச்சயமாக நம்பினூர்கள். ஆகவே தங்கள் தாய் மேற்பார்வைக்கு பெரிய உத்தமிபோல் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் காமவெறி பிடித்தவள் என்பதை அவர்கள் அறிந்துகொண்டு விட்டார்கள். மேலும் இதனல் அவர்கள், உலகில் எந்த மாதருமே பூரண பரிசுத்தாாக இருக்க முடியாதென்றும் தங்கள் ஆசையைத் தீர்த்துக் கொள்ளச் சௌகரியமும் இரகசியமுமான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்து அது கிடைக்கும்

போது தங்கள் காரியத்தை முடித்துக் கொள்வார்கள் என்றும், ஆகவே மேற்பார்வைக்குத்தான் உத்தமிகள் போல் காணப்படுவார்கள் என்றும் தீர்மானித்து விட்டார்கள். ஹேமவதி சீமாட்டி செய்த தவறான காரியம் அவளுடைய குமாரிகளின் ஹிருதயத்திலேயே இத்தகைய மோசமான கருத்தைத் தோன்றச் செய்ததென்றால் ஹேமவதியின் அறியாமையை என்னென்று சொல்வது? தாயாரே ஒழுங்கு தவறிய வழியில் சென்றால் வயது வந்த குமாரிகள் அதைப் பின்பற்றத் தயங்குவார்களா? ஹேமவதி சீமாட்டி மிக்க யோக்கியமானவள்போல் நடந்து கொண்டாலும் அந்தரங்கத்தில் அவள் காமவெறி கொண்டிருந்தாள் என்பதில் ஆட்சேபமே இல்லை.

ஹேமவதியைப் போன்ற தக்க பிராயத்தில் விதவைகளாகும் பெண்மணிகள் இவ்வாறு இச்சை கொண்டு அலைவதால் அது அவர்கள் குற்றமென்று சொல்ல முடியாது. அது சமூகத்தின் குற்றமே யாகும். ஆண் பெண் சேர்க்கை உணர்ச்சி, இரண்டு இயற்கைக் கால்கள் போதாதென்று மூன்றாவது செயற்கைக் காலாகிய தடியை ஊன்றி நடக்கும் கிழவனுக்கும் இருக்கும்போது நல்ல பருவம் வாய்ந்த பெண்கள் அதை மறந்து வாழவேண்டுமென்றால் அது ஆகக்கூடிய காரியமா? அதற்கென்ன? சமூகத்துக்கும் மனச் சாட்சிக்கும் பயந்து கொண்டோ, அல்லது சௌகரியமான சந்தர்ப்பங்கள் ஏற்படாமலோ பலர் யோக்கியர்களாக இருந்தாலும் அவர்கள் இருதயத்தைப் பிளந்து பார்த்தால் இந்த ஆசை நிரம்பி இருப்பதையும், சிற்சில சமயங்களில் இதற்காகக் கண்ணீர் விடுவதையும் பார்க்கலாம். மனைவியை இழந்த கணவன் உடனே விவாகம் செய்து கொள்வதுபோல் பெண்களுக்கும் சுதந்தரமிருந்தால் இரகசிய விபசாரங்களும், பெண்

களின் கண்ணீர் சொரிதலும் இல்லாமற்போகும். ஒரு விதவை உண்மையில் கடவுளுக்கு அஞ்சி பரிசுத்த வாழ்க்கையை நடத்தினாலும் அவளைப் பெற்றெடுத்த தகப்பன் முதல் பலரும் அனாவசியமாகவேணும் அவள்மீது சந்தேகங் கொள்ளாமல் இருப்பதில்லை! விவாக முறையிலும், பெண்கள் வாழ்க்கை முறையிலும் இன்னும் இதர சில விஷயங்களிலும் சீர்திருத்தம் ஏற்பட்டாலொழிய நம் ஜன சமூகம் நாளடைவில் நசித்துவிடுமென்பது நிச்சயம்.

## 34-வது அத்தியாயம்

### கண்ணாடியிற் கண்ட காட்சிகள்

செல்வநாதர் ஹேமவதி சீமாட்டியுடன் பேசிவிட்டுச் சென்றதினம் பகல் சுமார் நான்கு மணிக்குமேல் ராஜேஸ்வரி மாலை உடைகளை அணிந்து தன்னை பார்ப்போர் கண்ணைக் கவரும் வண்ணம் அலங்கரித்துக் கொண்டு தனியான ஒரு அறையில் ஒரு சோபாவின்மீது சாய்ந்துகொண்டு பல நாவல்களை வாசிப்பதில் அம் மாலைப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள். நாவலில் அவள் காதல் சம்பந்தமான பல விஷயங்களைப் படித்தாளேயொழிய அவளுடைய கவனம் அங்கு இருக்கவில்லை. காதல் என்னும் பேச்சு வந்ததும் அவளுக்குத் தன் காதல் சம்பந்தமான சிந்தனைகள் தோன்றலாயின. நாவலாசிரியர் விவகரித்துள்ள காதலிலும், தான் சொந்தத்தில் அனுபவிக்கும் காதலிலும் அவளுக்குப் புத்தி சென்றது. காதல் என்னும் மயக்க மருந்து அவள் தேகத்தில் ஊறிக்கொண் டிருந்ததால் அவளது கன்னங்களில் செந்நிறம் பாய்ந்தது. அவளது உதடுகள் ஈரத்தை யடைந்தன. அவளுடைய கண்கள் சொக்கிற்று.

என்? அவள் மனமே காதல் இன்பத்தில் மூழ்கியது. ஆகவே அவள் மெய் மறந்தாள். அந்த அறையில் அவ்வேளையில் அவள் தனியாகத்தான் இருந்தாள். கற்பகமோ யாருக்கும் தெரியாமல் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு அப்போது தான் அவளுடைய காதலன் துளசிங்கம் பிரபுவினிடமிருந்து வந்த கடிதத்துக்கு அவசரமாகப் பதில் எழுதிக் கொண்டிருந் தாள். ஹேமவதி சீமாட்டி தன் அறையில் உட்கார்ந்து கொண்டு செல்வநாதனைச் சந்தித்ததன் சம்பந்தமாய்ப் பல விஷயங்களைப்பற்றி யோசித்துக் கொண்டே, தனக்கு ஏற் பட்ட ஆபத்தினின்றும் தப்பித்துக் கொள்ள பல வழிகளை யோசித்துக் கொண்டிருந்தாள். தினகரம் பிரபுவோ அதிக நேரம் வெளியில் சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்ததும் அரை மணி நேரம்கூடத் தங்கியிராமல் பல விசித்திரமான சாமான்க ளைத் தன் கிளிபோன்ற கூத்தியாகிய நாடகக்காரி கமலகுமா ரிக்கு வாங்கிக் கொண்டு அவள் குடிலுக்குச் சென்றான்

ஆகவே ராஜேஸ்வரி தனியாக அந்த அறையில் இருந்து கொண்டு, நாவலில் காதல் சம்பந்தமான விஷயத்தைப் படித்த தும் தனது காதல், தன் தாயின் காதல், தன் சகோதரியின் காதல் முதலிய பலவற்றைப்பற்றிப் பின்வருமாறு சிந்தித் தாள்:—நான் எனது காதலனாகிய மோகன சுந்தரத்துடன் ஓடிப்போய் அவனை விவாகம் செய்து கொண்டால் உலகம் என்னைப் பார்த்துச் சிரிக்குமென்பதில் ஆட்சேபமில்லை. அவன் பிறவி சம்பந்தமான இரகசியம் யாதாயினும் அவன் இப்போது நமது மாளிகையில் ஒரு வேலைக்காரன் தானே! அவன் யாரோ அந்தஸ்துள்ள ஒருவருக்குப் பிறந்தவனே என்பது ருஜுவாகும் வரையில் காத்திருப்பதென்றால் அது முடியக்கூடிய காரியமா? இன்னும் எவ்வளவு காலம் நான் சும்மா இருப்பது? ஆண் பெண் சேர்க்கை என்னும் ஆசை

என்னை விழுங்கிவிடும்போ லிருக்கிறதே. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பெண்களாகிய நாங்கள் அதை எவ்வாறு உணருகிறோமென்பதை இந்த நாவல் ஆசிரியர்கள் நன்ருக எழுதிக் காட்டுகிறார்கள். மோகனசுந்தரத்தை நான் மணம் செய்து கொண்டு விடுவதே சரி, எனக்கு அவனிடம் அன்பு ஏற்பட்டபோதே அதில் தவறு ஒன்றுமில்லை என்று நான் உணர்ந்தே னல்லவா? அப்படியிருக்க இப்போது கவலைப் படுவானேன். சரி; அது கிடக்கட்டும். நான் ஏன் என் தாயாரைப்போல் நடந்துகொள்ளக்கூடாது? அவர் மோகனதாஸின் மனைவியாக விரும்பவில்லை. ஆனால்—' என்று நினைத்தபோது அவள் தன் சிந்தனையைத் தாராளமாக விட்டு விடாமல் அடக்கிக் கொண்டு தன் புஸ்தகத்தில் கவனம் செலுத்தினான். ஆயினும் அவள் மனதில் ஒரு தவருன அபிப்பிராயம் விதைக்கப்பட்டுவிட்டது. அது இனி சும்மா இருக்குமா?

ராஜேஸ்வரி இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்தபோது அந்த விசாலமான அறையின் கதவு திறக்கப்பட்டது. ஹேமவதி சீமாட்டி அவ்வறையில் நுழைந்தாள். ராஜேஸ்வரி புஸ்தகத்தைப் பார்ப்பதினின்றும் தன் தலையை நிமிர்த்தி உள்ளே நுழைந்தது யாரென்று பார்த்தாளேயொழிய வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசாமல் மறுபடி புஸ்தகத்தைப் பார்க்க ஆரம்பித்துவிட்டாள். அதுபோலவே ஹேமவதி சீமாட்டியும் அங்கே சோபாவில் சாய்ந்துகொண்டிருப்பது யாரென்று பார்த்தாளேயொழிய ஒரு வார்த்தையும் பேசாமல் அந்த விஸ்தாரமான அறையின் மற்றொரு மூலைக்குச் சென்று அங்கிருந்த ஒரு சோபாவில் சாய்ந்து ஏதோ சிந்தனையில் மூழ்கிவிட்டாள். தாயை மகளும் மகளைத் தாயும் நம்பவில்லை. பரஸ்பரம் ஒருவரிடம் ஒருவர் அவநம்பிக்கை கொண்டிருந்தார்

கள். மோகனதாஸ் சம்பந்தமாய்த் தான் சொன்னதைத் தன் மூத்த குமாரி நம்பவில்லை என்று ஹேமவதி தெரிந்து கொண்டாள். ராஜேஸ்வரியோ தான் மோகன சுந்தரத்தை நேசிப்பதைத் தந்திரசாலியான தன் தாயார் எப்படியாவது பார்த்துவிட்டிருப்பாள் என நினைத்து மனக்கவலை யடைந்த துடன் தாயினுடன் பேசவும் அஞ்சினாள். அந்த அறையின் மத்தியில் திரை விடப்பட்டிருந்ததால் ஹேமவதியின் இருப்பிடம் ராஜேஸ்வரிக்கும், ராஜேஸ்வரியின் இருப்பிடம் ஹேமவதிக்கும் தெரியவில்லை.

இளமையும் அழகும் வாய்ந்த ராஜேஸ்வரி புஸ்தகத்தைப் படித்துக்கொண்டே இருந்தாள். பத்து நிமிஷங்கள் கழிந்தன. அப்போது புஸ்தகத்தில் காதலைப்பற்றி இன்னும் அதிகமாக வருணித்த பாகம் வரவே ராஜேஸ்வரி தன் காதலைப் பற்றிச் சிந்தித்து அதிலேயே மூழ்கிவிட்டதால் தன் தாயார் திரைக்கு அப்பால் அதே அறையின் மற்றொரு மூலையில் இருக்கிறாள் என்பதை அடியோடு மறந்துவிட்டாள். அச் சமயத்தில் அவ்வறையின் கதவு மற்றொரு முறை திறக்கப் பட்டு, ராஜேஸ்வரியின் காதலனாகிய மோகனசுந்தரம் உள்ளே நுழைந்தான். அப்போது ராஜேஸ்வரி காதல் சிந்தனையில் மூழ்கியிருந்ததால் அவன் அவளது பார்வையில் இதற்குமுன் எப்போதும் இல்லாத அவ்வளவு அழகானவனாகக் காணப் பட்டான். அவனைக் கண்டதும் அவளது தேகம் முழுதும் மின்சார சக்தியால் தாக்குண்டதுபோல் அதிர்ச்சியடைந்தது. அவளது கன்னங்கள் சிவந்தன. அவனை அப்படியே விழுங்கிவிடுவதுபோல் பார்வை முழுவதையும் அவன்மீது செலுத்தி அவனைப் பார்த்தாள். உடனே மெய்மறந்து, 'அழகிற் சிறந்த மன்மதனே! நான் உன்னை எவ்வளவு நேசிக் கிறேன் தெரியுமா?' என்று ஆவலுடன் கூறினாள். அப்போ

துதான் அவளுக்கென்று கிடைத்த கடிதத்தை அவன் கையில் வைத்துக்கொண்டிருந்ததால் அதை அவளிடம் கொடுப்பதற்காகச் சமீபத்தில் சென்றான். அப்போது அவள் 'எனது அன்புள்ள மோகனம்' என்று கூறிக்கொண்டே தன் மெல்லிய காத்தால் அவனது கன்னத்தில் தட்டினாள். அவள் நடத்தை அவனை அவள்மீது சாயும்படி அழைத்ததுபோலக் காணப்பட்டதால் அவன் அவள்மீது சாயவும் அந்த இரு காதலர்களுடைய அதரங்களும் ஒன்றாகச் சேர்ந்து நீண்ட நேரம் பரஸ்பரம் முத்தமிட்டுக்கொண்டிருந்தன. அச்சமயத்தில் ராஜேஸ்வரிக்கு அவளுடைய தாயார் அதே அறையின் மற்றொரு மூலையில் இருந்தது ஞாபகத்துக்கு வரவும் அவள் மிக்க அச்சத்துடன் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். திரை மறைவாக இருப்பது கண்டு சந்தோஷமடைந்தாள். ஆனால் அவள் திடீரென்று பயந்ததை அவளுடைய முகத்திலிருந்தே மோகன சுந்தரம் தெரிந்துகொண்டதும் அவனும் அஞ்சி சிறிது விலகினான். ஆயினும் ராஜேஸ்வரி அவனை மீண்டும் தட்டிக்கொடுத்து உற்சாகமூட்டவே அவன் பழையபடியே அவளிடம் அன்புடனேயே அவ்வறையைவிட்டுச் சென்றான்.

ராஜேஸ்வரி, அவன் போனபிறகு புஸ்தகத்தைப் படிக்க முயற்சித்தாளென்றாலும் சிறிது நேரத்துக்குமுன் நடந்த சம்பவங்களே அவளது மனக்கண் முன் அதிகமாகக் காணப்பட்டதால் பற்பலவிதமான சிந்தனையில் மூழ்கினாள். ஆனால் ராஜேஸ்வரியும் மோகன சுந்தரமும் நடத்திய காதல் லீலைகளை ஹேமவதி சீமாட்டி பார்த்துவிட்டாள். எப்படி! திரை நடுவே இருந்ததால் எப்படி பார்க்க முடிந்திருக்கும் என்று கேட்கலாம். அவ்வறையில் ஹேமவதி சீமாட்டி உட்கார்ந்திருந்த பாகத்தில் அவளது சோபாவுக்கு எதிரில் அதிக உயரத்

தில் பெரிய நிலைக்கண்ணாடிகள் இருந்தன. அந்தக் கண்ணாடியில் ராஜேஸ்வரியும் மோகனமும் நடந்து கொண்ட செய்கையின் பிரதிபிம்பம் காணப்பட்டது. ஹேமவதி சீமாட்டி சோபாவில் உட்கார்ந்திருந்தபோது எதிரிலிருந்த கண்ணாடியைப் பார்த்துக்கொண்டே ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். சொற்ப நேரத்துக்கெல்லாம் மோகனசுந்தரம் உள்ளே வந்ததை அதில் கண்டாள். ஆனால் சில நிமிஷங்களுக்குப் பின்னர் அவர்களிருவரும் முத்தம் கொடுத்துக் கொண்டதைக் கண்டதும்தான் அவளுக்கு ஆச்சரியம் அதிகமாயவிட்டது. அப்படியும் இருக்குமா என்று நினைத்தாள். கண்ணாற் கண்டதை இல்லையென்று எப்படி நினைப்பது? திக்பிரமை யடைந்தாள். சற்று நேரத்துக்குள் மோகனம் அவ்வறையைவிட்டு வெளியே சென்றதையும் கண்ணாடியில் ஹேமவதி சீமாட்டி பார்த்தாள். அவள் மனம் ஸ்தம்பித்துவிட்டது. தான்கண்டதெல்லாம் மெய்யே என்று உணர்ந்தாள். தன் குமாரி கேவலம் ஒரு வேலைக்காரனிடம் காதல் கொண்டிருக்கிறாள் என்றால் அவள் வயிறு எரியாமல் என்ன செய்யும்!

ஐயோ கடவுளே! ஹேமவதியின் மமதையின் வாயில் மண் விழுந்தது. தான் விவாகம் செய்துகொண்ட குடும்பத்துக்கு எப்படிப்பட்ட கெட்ட பெயரும் வரக்கூடாதென்னும் எண்ணத்துடன் இருந்தாள். ஆனால் இதுவரை இக்கதையினால் தெரிவது என்ன? தன் குமாரி கேவலம் வேலைக்காரனிடம் காதல் கொண்டதுபற்றி அவளைக் கண்டிப்பதற்காகத் தன் ஆசனத்தினின்றும் பாய்ந்துசெல்ல விரும்பினாள். ஆயினும் அவள் தனக்கு அடங்கியவளல்ல என்பதும், தன்னிடத்திலேயே அவள் வேறுவிதமான சந்தேகங் கொண்டிருக்கிறாளென்பதும் ஹேமவதிக்கு தெரியுமாதலின் அவளை ஏதே

னும் கேட்டு அதனால் வாக்குவாதம் முற்றிப்போய் வீட்டில் அனைவரும் சிரிக்கும்படி நடந்துகொள்ள விரும்பவில்லை. மேலும் இனி எவ்வளவுதான் கோபித்துக்கொண்ட போதி லும் அவர்களிருவரும் முத்தம் கொடுத்துக்கொண்டது இல் லாமற் போகப்போகிறதா? நடந்த காரியம் நடந்து விட்டது. ஆகவே ஹேமவதி சீமாட்டி தன் கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டாள். அவசரப்பட்ட காரியத்தில் இறங் குவதில்லை. யென்று முடிவுசெய்து கொண்டாள். எப்படி யாவது தன் குமாரியை அந்த மோகனசுந்தரத்தினின்றும் பிரித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தாள். ஆயினும் அதையும் அவசரப்பட்டு செய்வது சரியல்லவென்று கருதி னாள். ஏதேனும் ஆத்திரத்துடன் காரியம் செய்தால் அவள் அவனுடன் எங்கேனும் மறைந்து போனால் என்ன செய்வது என்னும் அச்சமே அவளுக்கு அதிகமாய் இருந்தது.

ஹேமவதி சீமாட்டியின் அப்போதைய மனோநிலை மையை விவரிப்பது கஷ்டம். துக்கமயமாக இருந்தது. எல்லாவிதமான கவலைகளும் கஷ்டங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து அவளை நாசம் செய்துவிடக்கூடிய காலம் வந்து விட்டதோ என்று அஞ்சி மனங்கலங்கினாள். ஆனால் திடீ ரென்று பயந்து விடக்கூடிய சுபாவம் அவளுக்கு இல்லை யாத லால் அதிக நேரம் வரை துக்கத்துடன் இராமல் உடனே தன் மனத்தைத் தேற்றிக் கொண்டாள். பற்பல சிக்கலான விஷயங்களிலும் அவள் புத்தி செலுத்தவேண்டி யிருக்கிற தென்பதை உணர்ந்தாள். ஆகவே இறுதியில், 'எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் எல்லாவற்றையும் எதிர்த்துப் போராட வேண்டியது எனது கடமையாகும்' என்று தன் மனத்தில் சொல்லிக்கொண்டாள். அப்போது தன் ஆசனத்துக்கருகி லிருந்த அவ்வறையின் இரண்டாவது கதவு திறக்கப்பட்டது.

ஹேமவதியின் அந்தரங்க வேலைக்காரியாகிய மந்தரை அங்கு வந்து சேர்ந்தாள். அவளது முகத்தில் சிறிது நெல்லை வாரிப் போட்டால் உடனே அது பொறியாகப் போய் விடும்போல் அவ்வளவு கடுகடுப்புடன் அவளது முகம் இருந்தது. கண்கள் சிவந்திருந்தன. அவளைப் பார்த்ததுமே ஹேமவதி சீமாட்டி ஏதோ விசேஷமிருக்கிறதென நினைத்து, 'மந்தரை! என்ன விசேஷம்? ஏன் இவ்வளவு கோபத்துடன் இங்கே வந்திருக்கிறாய்?' என்று பரிந்து கேட்டாள். அப்போது அந்த வேலைக்காரி அதிக ஆத்திரத்துடன், 'கோபம் வாராமல் எப்படி இருக்க முடியும்? எல்லாரும் என்னை அவமானப் படுத்துவது என்று தீர்மானித்துவிட்டால் பிறகு என் பிழைப்புதான் எதற்காக? இனி என்னால் தாங்க முடியாது.' உன் பிள்ளையின் கொடுமையை அனுபவிக்க என்னால் முடியாது,' என்று கூறினாள். அப்போது ஹேமவதி சீமாட்டி, மந்தரை! என் பிள்ளையைப்பற்றிக் கேவலமாகப் பேசிவிடாதே. அவன் உனக்கு என்ன கெடுதி செய்தான் என்பதைச் சொல்' என்று கேட்கவும் அவள், 'சொல்வதென்ன? அவன் எப்போதும் எனக்குக் கோபம் வரும்படி ஏதேனும் செய்து கொண்டுதான் இருக்கிறான். ஆனால் இப்படிப்பட்ட பயங்காளியை நான் என் வாழ்க்கையில எப்போதும் கண்டதில்லை. அவன் மாளிகையைவிட்டு இறங்கி வரும்போது நான் எழுந்து தூரத்தில் ஓடிப்போய் நின்று மரியாதை செய்யவில்லையாம். அதற்காக என் கை கால்களைக் கட்டி ஒரு மூலையில் போட்டுவிடப் போகிறானாம். ஆனால் அவன் சொல்கிறபடி அவனால் செய்ய முடியாது என்பது உனக்கும் தெரிந்ததுதானே' என்றாள்.

அவ்வேளையில் அதே அறையின் மற்றொரு மூலையிலிருந்த ராஜேஸ்வரி அங்கு வந்து, 'அம்மா! இந்த மந்தரை

நமது தினகானுக்கு விரோதமாக எதைச் சொன்னாலும் நீ நம்பமாட்டாய் என்றே நம்புகிறேன். ஏனென்றால் இவளைப் போல் கோள் சொல்பவர் வேறு யாருமில்லை. அவள் என்னிடமும் கற்பகத்தினிடமும்கூட கர்வத்துடன் நடந்து கொள்கிறாள். வீட்டிலுள்ள எல்லா வேலைக்காரர்களுமே அவளை வெறுக்கிறார்கள்,' என்று கூறினாள். அப்போது மந்தரை இன்னும் அதிக ஆத்திரமடைந்து உரத்த சத்தத்துடன், 'ஓ! அப்படியா? என்னை எல்லாரும் வெறுக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் இன்னும் அதிகமாக என்னை வெறுக்கும்படி நடந்துகொள்ள எனக்குத் தெரியும். ராஜேஸ்வரி உன்னையும் நான் ஒரு கை பார்த்துக் கொள்கிறேன்' என்று ஆர்ப்பரித்தாள். இதையெல்லாம் கண்டு அதிக மனத் துயரமடைந்த ஹேமவதி சீமாட்டி, 'மந்தரை! நான் இதைச் சகிக்க முடியாது' என்று இன்னும் ஏதோ சொல்லப் போன போது ராஜேஸ்வரி குறுக்கிட்டு, 'அம்மா! இந்த மாளிகையில் நீ எஜமானியா அல்லது மந்தரை எஜமானியா என்பதைத் தெரிவித்துவிடக்கூடிய காலம் வந்துவிட்டது. என் சம்பந்தப்பட்ட வரையில் மந்தரை என்னை அவமானப்படுத்துவதை நான் சிறிதும் பொறுத்துக் கொள்ள முடியாது,' என்று கூறிக்கொண்டே அவ்வறையைவிட்டு வெளியே போய்விட்டதுடன் அவ்வறையின் கதவையும் தடால் என்று ஆத்திரத்துடன் மூடிக்கொண்டு போனாள்.

ராஜேஸ்வரி போன பிறகு ஹேமவதி சீமாட்டியுடன் தான் தனியாக இருந்ததால், 'பார்த்தாயா! உன் மகளே என்னை எவ்வளவு கேவலப்படுத்தி விட்டாளென்பதை. இப்படித்தான் வீட்டில் ஒவ்வொருவரும் என்னை அவமானப்படுத்த உரிமை பெற்றிருப்பதாக நினைக்கிறார்கள்,' என்று தெரிவித்ததும் ஹேமவதி சீமாட்டி மிகவும் கெஞ்சிக் கேட்

டுக் கொண்டு சமாதானம் செய்பவள்போல், மந்தரை! 'ஆத்திரப்படவேண்டாம். எப்போதும் நிதானமாக இருப்பதே நல்லது. கோபத்தால் கண்டபடி பேசிவிட வேண்டாம்,' என்று மெதுவாகச் சொன்னாள். அதற்கு அவள், 'கோபிக்க வேண்டாம் என்று சொல்கிறாயே. அவர்கள் மட்டும் என்னை அவமானப்படுத்தலாமா? அதற்கு முதலில் பதில் சொல்' என்று கேட்கவும், ஹேமவதி, 'மந்தரை! நீயாக ஏன் அவர்கள் அவமானப்படுத்துவதாக நினைக்கிறாய்? மலையைப் பார்த்து நாய் குரைக்கிறதென்று நீ சும்மா அலட்சியமாக இருந்து விடுவதுதானே,' என்று சமாதானப்படுத்த முயன்றாள். ஆனால் இதை மந்தரை விகல்பமாக நினைத்துக்கொண்டு 'ஆஹா! அப்படியா? என்மீதே நீயும் பாய ஆரம்பித்துவிட்டாயோ? ஹேமவதி! உஷாராய் இரு. ஒரு வார்த்தை வெளியிட்டு விடுவேனாயின் இக் குடும்ப வண்டவாளம் வெளியாய் விடும்' என்று மிரட்டும் தோரணையில் பேசினாள்.

அப்போது ஹேமவதி சீமாட்டி மிக்க பீதியடைந்தவள் போல் பரபரப்புடன், 'மந்தரை! மெதுவாகப் பேசு, இவ்வாறு கத்த வேண்டாம். உன் ஆத்திரத்தை அடக்கிக்கொள். சுவர்களுக்கும் காது இருப்பதுபோல் விஷயம் வெளியாய்விடும். நாம் ஏதேனும் பரஸ்பரம் சம்மதமான ஒரு முடிவுக்கு வருவோம். என்னுடைய மாளிகையில் உனக்குச் சுகமில்லையென்று நீயே கூறுகிறாய். வேறு எங்கேனும் நல்ல இடத்தில் வேலை பார்த்துக் கொடுப்பதாக எவ்வளவோ முறை சொல்லியிருக்கிறேன். நீ என் அமைதியான வாழ்க்கையை நடத்தச் சௌகரியமான இடத்துக்குச் செல்ல லாகாது. நான் மாதந்தோறும் ஏதேனும் பண உதவி செய்வேன். அதைக் கொண்டு ஒரு எஜமானியைப்போல் வாழலாமே என்று கூறினாள்.

அதற்கு மந்தரை, 'நான் தக்க காரணங்களுக்காகத்தான் அவ்வாறு போய்விடமாட்டேன் என்கிறேன். முதலாவதாகப் பழைய உடைகளை எறிந்துவிடுவதுபோல் எறியப்பட நான் விரும்பவில்லை. இரண்டாவதாக, நான் இங்கு அந்தரங்க வேலைக்காரியாக இருப்பதால் மற்றவர்களை மேய்க்கும் அதிகாரமிருக்கிறது. அந்த அதிகார பதவியைவிட்டுச்செல்ல எனக்கு மனமில்லை. மூன்றாவதாக, நான் இம்மாளிகையில் சிலரை வெறுக்கிறேன். அவர்களுக்கு எனது வெறுப்பைக் காட்டுவதில் எனக்கு ஒருவித சந்தோஷம். அந்த சந்தோஷத்தையும் இதற்குள் நான் இழக்கத் தயாராயில்லை,' என்று ஆணவத்துடன் நிச்சயமாகக் கூறியதால் ஹேமவதி அவளது உறுதியைக் கண்டு சிறிது அஞ்சினாள். ஆயினும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, 'மந்தரை! நீ கூறுவது நியாயமாக இல்லை. தயவு செய்து எனக்காகக் கொஞ்சம் விட்டுக்கொடு. உன் மனம் கஷ்டப்படும்படி நான் எப்போதேனும் நடந்து கொண்டிருக்கிறேனா? உன்னை என்னை அந்தரங்க வேலைக்காரியாக வைத்துக்கொண்டு உனக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் அளிக்கவில்லையா?'' என்று பரிவுடன் பேசியும் மந்தரை எப்படிப்பட்ட சமாதானத்துக்கும் வர இஷ்டப்படாதவள்போல், 'அதெல்லாம் முடியாது. இந்த மாளிகையில் உனக்கு அடுத்தபடியாக நான்தான் அதிகாரம் செலுத்துபவளாக இருக்க வேண்டும். உன் மகன் தினகரனும் குமாரிகளும் என்னை மரியாதையாகவே நடத்த வேண்டும். இதை நீ அவர்களிடம் சொல்லிவை. இல்லையென்றால் நான் பின்னால் எது வந்தாலும் சரியென்று பழிவாங்க நினைத்துவிடுவேன்' என்று பிடிவாதமாகக் கூறினாள்.

மந்தரை அவ்வாறு பேசும்போது அவ்வறைக் கதவின் பிடியைத் தன் கையால் பிடித்துக் கொண்டிருந்தாள். பேச்சு

முடிந்ததும் அப்படியே வெளியே போகப் பார்த்தாள். ஆனால் ஹேமவதி சீமாட்டி தன் கைபால் சமிக்ஞை செய்து அவளை அங்கேயே இருக்கும்படி கேட்டுக் கொண்டாள். அதற்கு அவள் இனி அங்கு நிற்க முடியாதென்றும், தனக்கு ஏதேனும் அவமானம் யாராலாவது ஏற்படுமாயின் உடனே அக் குடும்பத்தின் மர்மத்தை வெளியிட்டுவிடப் போவதாகவும் முடிவாகத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து போய்விட்டாள். அப்போது ஹேமவதி சீமாட்டி, 'ஆஹா! இந்த விஷயத்திலும் நெருக்கடி ஏற்பட்டுவிடும் போலிருக்கிறதே! நான் சமாளிக்க வேண்டிய பலரிலும் இந்த மந்தரைதான் மிகப் பொல்லாதவளாக இருக்கிறாள். ஆயினும்' என்று தன் புருவங்களை நெறித்துக் கொண்டும், உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டும் பார்த்ததிலிருந்தும் அவள் ஏதோ ஒருவித தீர்மானத்துக்கு வந்தவள்போல் தோன்றியது.

அவ்வேளையில் ஒரு வேலைக்காரன் அங்கே வந்து இரவு ஆகாரம் படைக்கப்பட்டிருப்பதாகவும், மற்றவர்கள் அவளுக்காகக் காத்திருப்பதாகவும் கூறினான். ஹேமவதியும் மாளிகையைவிட்டுக் கீழே சாப்பாட்டு அறைக்கு வந்தாள். அங்கு ராஜேஸ்வரியும் கற்பகமும் காத்திருந்தார்கள். அன்று அந்த மூன்று பெண்கள் மட்டுமே ஆகாரம் அருந்தினர். வேறு எவரையும் அன்று அழைக்கவில்லை. கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணி போன்ற அப்படிப்பட்ட உயர் குடும்பத்தார் தங்களைப்போன்ற அந்தஸ்திலுள்ள பலரை வீட்டுக்கு அழைத்து அவர்களுடன் உல்லாசமாகப் பேசிக்கொண்டே சாப்பிடுவது வழக்கம். அப்படி ஏதேனும் ஒருநாள் யாரையும் கூப்பிடாமல் இருந்தால் அன்றைய ஆகார வேளை மிகவும் உற்சாகமற்றதாக இருந்ததாக நினைப்பர். ஆகவே அன்று அந்த

ஆகார வேளையில் உற்சாகமிருக்கவில்லை யென்றாலும் அம் மூவரும் பேசாமடந்தைகளாய் இருக்கவில்லை. ஏதோ சில விஷயங்களைப்பற்றி வேடிக்கையாகப் பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆயினும் அச் சம்பாஷணை நேரம் முழுதும் ஹேமவதி சீமாட்டி தன் மூத்த குமாரியான ராஜேஸ்வரியின் முகத்தையே அவளுக்குத் தெரியாதபடி உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். தான் நினைத்துள்ள சந்தேகம் ஏதேனும் உறுதிப்படும்படியான சந்தர்ப்பம் ஏற்படுமோ என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளும்படி எத்தகைய சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

தாயும் குமாரிகளும் இவ்வாறு ஆகாரம் அருந்திக் கொண்டிருந்தபோது வேலைக்காரனான மோகனசுந்தரம் அங்கே வந்து சீமாட்டியாரின் காதில் குசு குசுவென்று எதையோ சொன்னான். அதைக்கேட்டதும் ஹேமவதியின் தேகம் அவளுக்கும் தெரியாமல் நடுங்கியது. அவளது முகமும் வெளுத்தது. ராஜேஸ்வரி தனது ஆகாரத்தில் அதிக கவனம் செலுத்தியதுபோல் காணப்பட்டாலும் தன் தாயினிடம் ஏற்பட்ட மாறுதல்களை யெல்லாம் நன்றாகப் பார்த்தாள். சொற்ப நேரத்துக்குப் பிறகு ஹேமவதி சீமாட்டி உரத்த குரலுடன், 'நான் இன்னும் சில நிமிஷங்களில் அவளை வந்து பார்ப்பதாகச் சொல்' என்று மோகனத்தினிடம் கூறினாள். உடனே அவன் வணக்கம் செலுத்தி விட்டு வெளியே போய்விட்டான். அவன் போனபிறகு ஹேமவதி சிறிது நேரம் அங்கிருந்து விட்டுத் தன்னைக் காண வந்தவரைப் பார்க்கும் பொருட்டு போய்விட்டாள். தாயார் வெளியே போனதும் ராஜேஸ்வரி தன் தங்கை கற்பகத்தி

னிடம், 'இப்போது வெளியே வந்திருக்கும் மாது அன்று நமது தாயார் பெரிய விருந்து நடத்தியபோது திடீரென்று நமது தாயாரைக் காணவந்த மாதாகத்தான் இருக்கவேண்டும் என்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. இப்போது எப்படியாவது நான் போய் மறைந்திருந்து அவர்கள் பேசுவதைக் கவனிக்கவேண்டும்' என்று தெரிவித்ததும் கற்பகம், 'அக்கா! வேண்டாம். போகாதே. நீ கவனிப்பதைத் தாயார் பார்த்துவிட்டால் கஷ்டம். இன்று பகல் அவள் செல்வநாதருடன் பேசியபோது நாம் மறைந்திருந்து கேட்டதே எனக்குப் பிடிக்கவில்லை. ஒருவருக்குத் தன் தாயினிடமே அவநம்பிக்கை ஏற்படுவதென்பது ஆபாசமானதாகும்' என்று கூறினார்.

186502

அதற்கு மூத்தவள், 'நமக்கு வயதாகி விட்டது. நாம் எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். இனி எனக்கு நானே எஜமானியாக இருக்கப் போகிறேன். இப்போது நமது தாயாருடன் பேச வந்திருக்கும் மாது யார்? என்று நான் தெரிந்துகொள்ள வேண்டியதுதான் இதோ போகிறேன்' என்று கூறிக்கொண்டே அவ்வறையை விட்டுச் சென்றாள். சாதாரணமாக யாரேனும் அந்தரங்கமாய்ப் பேச வேண்டுமென்று வந்தால் அவர்களை ஹேமவதி சீமாட்டி எந்த அறையில் சந்திப்பது வழக்கமோ அதே அறைக்குப் பக்கத்திலுள்ள ஒரு ஹாலின் ஓரத்தில் நின்று உற்றுக் கவனித்தாள். அவ்வறையில் ஒரு மாது 'நான் உன்னை வற்புறுத்துகிறேன். மீண்டும் அதையே தெரிவிக்கிறேன்' என்று அதிகார தோரணையில் பேசுவது ராஜேஸ்வரிக்குக் கேட்டது.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆ பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம், 5-ம், 6-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம்பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்டவிலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

| | | | | |
|---|---|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# “ஆனந்தபோதினி”

## ஓர் இனிய மாசாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| 6-பாகமும் ... | 11 | 10 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | ரத்தினாபாய் ... | 1 | 18 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 10 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 2 |
| கனகபூஷணம்2பாகம் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 12 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

**விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,**
**6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.**